Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி-24 | 10.10-2005 | திங்கட்கிழமை | ஓசை-235



கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி. வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-12955)

# எதிரியின் ஆக்கிரமிப்பிலுள்ள மண்ணை மீட்டெடுத்து அங்குள்ள பெண்களின் துயர் போக்க வேண்டும்

## அரசியல்துறை மகளிர் பிரிவு அறைகூவல்

எமது தாயகம் இன்னும் முற்று முழுதான விடுதலையை அடைந்துவிடவில்லை. அழகும் வளமும் நிறைந்து தமிழரிற்கு வாழ்வளிக்கின்ற தாயகத்தின்பல பகுதிகள் இன்றும் எதிரியின் ஆக்கிரமிப்புக்கு இலக்காகிக் கிடக்கின்றது. அந்த மண்ணை மீட்டெடுக்க வேண்டும் அங்கே சிதைந்து கொண்டிருக்கும் அவர்களின் வாழ்வை, அவர்கள் சுமக்கும் துயரச் சிலுவைகளைத் தூக்கியெறிந்து போராடும் பெண்களாக அவர்கள் மாற வேண்டும். இவ்வாறு 2 ஆம் லெப்.மாலதியின் நினைவு நாளையும் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு அரசியல்துறை மகளிர்பிரிவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இன்று தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள். இந்த நாளில் தமிழீழ மக்கள் அனைவரும், விடுதலை மீதான அதீத பற்றுறுதியோடும், தமிழீழப பெண் சமூகத்திற்கு மாபெரும் முன்னோடியாகவும் தமிழீழப் பெண்களின் எழுச்சியின் குறியீடாகவும், தன்னை அர்ப்பணித்த 2 ஆம் லெப்.மாலதியை நினைவு கூருகின்ற புனித நாள்.

தமிழீழத்தின் மன்னார் மாவட்டத்தில் எளிமையும் அழகுமான அந்த ஆட்காட்டி வெளிக் கிராமத்தின் புழுதி படிந்த வீதிகளில் ஓடித்திரிந்த பெண்,உலகத்தமிழினமே போற்றுகின்ற விடுதலையின் குறியீடாக இன்று மாறியிருக்கிறாரெனின் அந்த மாற்றத்திற்கு வழியமைத்துக் கொடுத்தது எமது தமிழீழ விடுதலைப்புலிகள்இயக்கமேயாகும்.""சத்தியத்திற்காகச் சாகத்துணிந்துவிட்டால் சாதாரண மனிதப்பிறவியும் சரித்திரம் படைக்க முடியும்" என்பது எமது மேதகு தமிழீழ

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளைக் கொச்சைப்படுத்தி போராட்டத்தை பலவீனப்படுத்த முயல்கின்றது அரசு



## திருமலை பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் கூட்டத்தில் இரா. சம்பந்தன் பா.உ குற்றச்சாட்டு

(திருகோணமலை)

முறையான சமாதானப் பேச்சுவார்த்தை தற்போது இல்லை. சமாதானமும் இல்லை. இதனை எவ்வளவு காலத்திற்கு நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? விடுதலைப்புலிகளைக் கொச்சைப்படுத்தி பலவீனமடையச் செய்யும் முயற்சியில் தான் அரசும் அதன் படைகளும் ஈடுபட்டுள்ளன. இவ்வாறு கூட்டமைப்புப் பாராளுமன்றக் குழுவின் தலைவரும் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். நேற்றுக்காலை திருகோணமலைவிக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வு தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் பேசும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கசியும் கடற்படை இரகசியங்கள்; தளபதி வசந்தகரன்னகொட கவலை

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படையின் இரகசியங்கள் வெளிப்படுத்தப்பட்டு வருவது தொடர்பாக கடற்படை தளபதி வசந்த கரன்னகொட கவலை தெரிவித்துள்ளார்.புதிதாகப் பொறுப்பேற்றுள்ள வசந்தகரன்னகொட அண்மையில் கடற்படையினருக்கு அனுப்பிய சுற்றறிக்கை ஒன்றில் இது தொடர்பாக கூறியுள்ளார்.

அனுமதியின்றி கடற்படையின் ஆவணங்கள்வெளிப்படுத்தப்படுவது கடற்படையின் ஒழுங்குவிதிகளுக்கு எதிரானது, சட்டவிரோதமானது என்றும், இந்தச்செயலில் ஈடுபடுவோர் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் வசந்தகரன்னகொட எச்சரித்துள்ளார்.

கடற்படையின் அனைத்துப்பிரிவுப் பொறுப்பாளர்களும் தங்களது அணிகளுக்கு இது தொடர்பான அறிவுறுத்தலை விடுக்குமாறுஅந்த சுற்றறிக்கையில் வசந்தகரன்னகொட தெரிவித்துள்ளார்.

## -சுண்டிக்குளம் கடற்பகுதியில்- கடற்றொழிலில் ஈடுபட்ட மீனவர் மீது சிறிலங்கா கடற்படை தாக்குதல்

(சுண்டிக்குளம்)

சுண்டிக்குளம் கடற்பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் தாக்குதல்களை மேற்கொண்டதோடு கடற்றொழில் உபகரணங்களையும் சேதப்படுத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலைசுண்டிக்குளம் கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது இந்தக்கெடுபிடிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை வழிமறித்த கடற்படையினர் மீனவர்களை கடுமையாகத் தாக்கியதோடு மீனவர்களின் படகுகளில் இருந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் யுத்த காலத்தைவிட தற்போது அதிகளவு சோதனைச்சாவடிகள்

### சிங்கள ஊடகவியலாளரிடம் காந்திசேவாசங்கத் தலைவர்

(திருகோணமலை)

"யுத்தம் நடந்த காலத்தில் திருகோணமலை நகரில் குறிப்பிட்ட ஒரு சில இடங்களில் தான் படையினரின் காவலரண்கள், சோதனைச் சாவடிகள் இருந்தன. இப்போது சமாதான காலம் என்று கூறிக்கொள்ளப்படும் சூழலில் அங்கும் இங்கும் எங்குமாக காவலரண்கள் , சோதனைச் சாவடிகள் காணப்படுகின்றன" என்று திருகோணமலை மாவட்ட காந்திசேவா சங்கத்தின் தலைவர் மருத்துவர் கே.ஜெயகாந்தராசா, தெற்கிலிருந்து வந்த சிங்கள ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடலின்போது தெரிவித்தார்.

சோதனைச் சாவடிகளில் தமிழ் பொது மக்களை மாத்திரம் பேருந்து, ஈருருளிகளி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## க.க.குழு முன்னாள் தலைவர் இன்று இலங்கை வருகை

(கொழும்பு)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு வின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் டொன்புறூவ் ஹொவ்டே எட்டுநாள் விஜயம் ஒன்றைமேற்கொண்டு இன்று இலங்கை வருகிறார்.

அவர் எதிர்வரும் 13ஆம் திகதி கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சு வார்த்தைகளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## -2 ஆம் லெப். மாலதி நினைவுநாள்- தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் இன்று சிறப்புடன் அனுஷ்டிப்பு

(நமது நிருபர்)

தமிழீழ பெண்கள் எழுச்சிநாளும் 2ஆம் லெப். மாலதியின் நினைவுநாளும் இன்று தமிழீழமெங்கும் உணர்வெழுச்சியுடன் நடைபெறவுள்ளது. இன்று காலை 9.00 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின்றன தொடர்ந்து கருத்தரங்குகள், சிரமதானப்பணிகள் என்பன இடம் பெறவுள்ளன. மாலை நிகழ்வுகளாக உருவப்பட ஊர்வலங்கள் நடைபெற்று, மாலை 5.45மணிக்கு பொதுச்சுடரேற்றி தேசியக்கொடியேற்றப்படவுள்ளதுடன் 2ஆம் லெப். மாலதியின் உருவப்படத்திற்கு சுடரேற்றி மலர்மாலையிட்டு மலர் வணக்கம் செலுத்தப்படும்

(12 ஆம் பக்கம் பார்க்க)



## வெட்டுக்காயங்களுடன் குடும்பஸ்தர் மீட்பு

பருத்தித்துறை மாயக்கை கோயில் முன்பாக உள்ள நொச்சிப்பத்தைக்குள்ளிருந்து வெட்டுக் காயங்களுடன் நேற்றுக்காலை 7.00 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் அப்பகுதி மக்களினால் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் அல்வாய் வடக்கு முத்துமாரி அம்மன் கோவில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**காணி விற்பனைக்குண்டு**

7 ஆம் வட்டாரம் சிவநகர் புதுக் குடியிருப்பு பொக்கணை வீதியில் அமைந்துள்ள தென்னைபிரயோசனங்களுடன் கூடிய 1/4 ஏக்கர் அளவு காணி விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி செ. பாலன்,ராஜ் அழககம், முல்லைத் தீவு வீதி,புதுக்குடியிருப்பு. (6622)

**விற்பனைக்குண்டு**

விசேடமாகத் தயாரிக்கப்பட்ட நாற்று மேடைகளிலிருந்து நடுகைக்குத் தயாராக உள்ள அதியுயர் விளைச்சல் தரக்கூடிய நல்லின தென்னங் கன்றுகள் விற்பனைக்குண்டு.நா. இரத்தினராசா அளம்பில்.(6621)

**காணி விற்பனைக்குண்டு**

இராமநாதபுரம் 296 5 ஆம் யூனிட்டில் அமைந்துள்ள குடியிருப்பு காணி ( 2 ஏக்கர்) அதனுடன் இணைந்த வயல் காணி (3+3=6 ஏக்கர்) விற்பனைக்குண்டு. தொடர்பு:- கோகுலன் விற்பனை நிலையம் சந்தையடி, வட்டக்கச்சி-0714-814977(6827)

**விற்பனைக்குண்டு**

கிளி. வயலெசுடியில் A-9 பாதைக்குச் சிறிது தூரத்தில் 1/4, 1/2, 3/4 ஏக்கர் காணிகள் விற்பனைக்குண்டு. தொடர்புகட்டு:-தருமு சைக்கிள்கடை. பிரதான வீதி, திருநகர்,கிளிநொச்சி. (6808)

**விற்பனைக்குண்டு**

எம்மிடம் விதைசணல் விற்பனைக்குண்டு. தொடர்புகட்கு:-சுடர் நிலவு ப.பொ. வாணிபம், ஏ-9 வீதி, ஆனந்தபுரம்,கிளிநொச்சி. (6822)

**விற்பனைக்குண்டு**

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோக்கொப்பி, லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்துகொள்ளவும், பிள்ளையார் பொத்தகசாலை கண்டிவீதி-கிளிநொச்சி-T.P-2285750 (சி.13022)

**பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப்படிவம்**

2005,2006 ஆம் கல்வி ஆண்டுக்குரிய பல்கலைக்கழக அனுமதிப் படிவங்களை குயிலன் புத்தகசாலை, ஆனந்தபுரம்,கிளிநொச்சியில் பெற்றுக்கொள்ளலாம். (6825)

## உந்துருளியில் பயணித்தவர் தவறிவீழ்ந்து மரணம்!

உந்துருளியின் பின்னால் இருந்து பயணித்தவர் தவறி வீழ்ந்தமையால் மரணமடைந்துள்ளார்.

நேற்று மாலை நல்லூர் சட்டநாதர் கோயிலுக்கு முன்னாள் இவ் விபத்து இடம் பெற்றது. கந்தர் மடத்தைச் சேர்ந்த ஒன்பது பிள்ளைகளின் தந்தையான செல்லத்தம்பி செல்வராசா (43 வயது) என்பவரே மரணத்தை தழுவிக் கொண்டவராவார்.

கூலிவேலை செய்வற்காக ஒருவர் அழைத்துச் செல்லும் போது குறிப்பிட்டவர் உந்துருளியில் பின்பக்கத்தில் இருந்ததாகவும் உந்துருளி குலுக்கியதைத் தொடர்ந்து இவர் வீழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணம் மேலதிக நீதிபதி சிறிநிதி நந்தசேகரன் விசாரணை நடத்தியதைத் தொடர்ந்து மரண விசாரணைக்காக சடலத்தை வைத்தியசாலையில் ஒப்படைக்கும்படி கட்டளையிட்டார். (41)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கடந்த 06.10.2005 அன்று யாழ்.பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற 24 ஆவது பட்டமளிப்பில்அரசறிவியல் பாடத்தில் சிறப்புக் கலைமாணி (BA) பட்டம் பெற்ற சிலாவத்தை, முல்லைத்தீவைச் சேர்ந்த சதாசிவம்-சுதாகரன் மென் மேலும் பல பட்டங்கள் பெற்று மென் மேலும் தமிழீழத்தில் சிறந்து விளங்க வற்றாப்பளை அம்மனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.



**சதாசிவம்-சுதாகரன் (BA)**

பெரியக்கா சுதா,<br>
அத்தான் தர்மலிங்கம்,<br>
பிள்ளைகளான<br>
திலீபனா, துசான், துவாரகன்;<br>
ஆகியோர்.

(13055)

## 8ஆம் ஆண்டு நினைவு நாள்

"கர்த்தர் என் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை"



ஈர் நான்கு வருடங்கள்<br>
நொடிப் பொழுதில் வருமென்று<br>
யார் இங்கு நினைத்தார்கள்<br>
இன்னும் நூறாண்டு வருடங்கள்<br>
கரைந்தோடிச் சென்றாலும்-நீ<br>
போர் கொண்ட இடம்<br>
புத்துயிர் பெற்றாலும்<br>
உன்- பேர் சொல்லும்<br>
காவியங்கள் உருமாறிப் போய்விடுமா<br>
ஆயுதம் நீ ஏந்தி<br>
அரக்கர் குலம் தான் அழித்து<br>
மேவிய வெற்றிதனை<br>
இவ்வையகம் மறுத்திடுமா

**லெப். தமிழவன்**

பிலிப்பையா-அலெக்ஸ்கிறேசியன்<br>
(96/1 திருவையாறு,கிளிநொச்சி)

மண்ணுலகில்:- 09.04. 1979<br>
விண்ணுலகில்:- 10.10. 1997

என்றும் உன் நினைவுடன் ஆத்மா சாந்திக்காய் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்

உன் நினைவுடன்<br>
பிலிப்பையா குடும்பம்

(6416)

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்...

**கப்டன் சரவணா**<br>
(பசுபதி உதயதாரணி)<br>
இல. 111<br>
கனகாம்பிகைக்குளம்<br>
கிளிநொச்சி<br>
திதி 10.10.2005

மண்ணில் 12-07-1976<br>
விண்ணில் 04-10-2000



தாயக<br>
விடுதலைக்காய்<br>
தானைத் தலைவன்<br>
அணியில்<br>
சரவணவாய் களம்<br>
புகுந்து சமர்பல<br>
புரிந்த வீரமறத்தியே<br>
நீ காவியமாகி<br>
ஐந்தாண்டானாலும்<br>
பொழுதும்<br>
உம்நினைவில்<br>
உருகி நிற்கின்றோம்<br>
மீண்டும் எம்முடன்<br>
வாராயோ

(13052)

குடும்பத்தினர், போராளிகள்



## கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் கல்வி நிதிய வளர்ச்சிக்காக

# முத்தமிழ் அரங்கம்

காலம் :- 15-10-2005 (சனிக்கிழமை) முதலாவது காட்சி பிற்பகல் 2.00 மணி.<br>
இரண்டாவது காட்சி மாலை 7.00 மணி.

இடம் :- கிளிநொச்சி பண்பாட்டு மண்டபம்.

மூன்று மணி நேர முத்தமிழ் சுவை காண முன்வாருங்கள் நிதிய வளர்ச்சிக்காக உதவிடுங்கள்

(சி.13057)

விளம்பர அனுசரணையாளர்கள் — மசு பல் பொ. வாணிபம் (சோபனாஸ்) புகையிரத வீதி, கிளிநொச்சி.

**அகவிழி**

ஆசிரியத்துவ நோக்கு

தமிழ் பேசும் பிரதேசங்களுக்கு சுயாதீனமான கல்விக் கொள்கை அவசியமா?

ஆசிரியர்களின் அந்தஸ்து உயர்விற்கு

# பாகிஸ்தானில் ஏற்பட்ட கொடூர பூகம்பத்துக்கு பலியானோர் தொகை 19 ஆயிரத்தை தாண்டியது



இஸ்லாமபாத்தில் பூகம்பத்தால் தரை மட்டமானபல மாடிகட்டடத்தின் இடி பாடுகளில்சிக்கிய இருவர் புதைந்த நிலையில் காணப்படுகின்றனர்.

(இஸ்லாமபாத்)

**பாகிஸ்தானில் நேற்று முன்தினம் ஏற்பட்ட கொடூரமான பூகம்பத்தில் இறந்தவர் எண்ணிக்கை 19 ஆயிரத்தை தாண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

இத்தகவலை பாகிஸ்தான் இராணுவ செய்தித் தொடர்பாளர் மேஜர்ஜெனரல் சவுகத் சுல்தான் தெரிவித்துள்ளார். மீட்புப் பணிகள் நடந்துவருகின்ற நிலையில் .41ஆயிரம் பேர்காய மடைந்துள்ளனர். அடுத்தடுத்து 27 முறைலேசான நிலநடுக்கம் உணரப் பட்டுள்ளது. இவை அனைத்தும்பாகிஸ்தானை மையமாகக் கொண்டே நிகழ்ந்துள்ளது எனத் தெரிவிக்கப் படுகிறது.





இஸ்லாமபாத்தில் இடிந்த பல மாடிக் கட்டடத்தில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் முயற்சியில் மீட்புக்குழுவினரோடு இணைந்து பொதுமக்களும் ஈடுபட்டுள்ளனர்.

## பாகிஸ்தானை தாக்கிய பூகம்பம் 40 ஐதரசன் குண்டுகளுக்கு சமன்

பாகிஸ்தானை மையமாக வைத்து நேற்றுமுன்தினம் தாக்கிய பூமி அதிர்ச்சியின் சக்தி 40ஐதரசன் குண்டுகள் மொத்தமாக வெடித்ததற்கான சக்தி கொண்டது என்று பூகம்ப ஆராய்ச்சி நிபுணர் ஜனார்த்தன நெகி தெரிவித்தார்.

இந்தப் பூகம்பம் மிகவும் கடுமையானது என்பதால் இதன் பின்விளைவு இத்துடன் நின்று விடாது, என்றும் தொடர்ந்து சிறிது காலம் லேசான தொடர் அதிர்வுகள் அடிக்கடி ஏற்படும்" என்றும் அவர் கூறினார்.

## 400 பாடசாலை மாணவர்கள் பலி

பாகிஸ்தானில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பூகம்பத்தில் 400 மாணவ - மாணவிகள் பலியானார்கள். காலையில் நடந்த பயங்கர பூகம்பத்தில் பாகிஸ்தானில் பேரழிவு ஏற்பட்டது. பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளது.

மன்ஷேஹ்ரா மாவட்டத்தில் இரண்டு பாடசாலைகள் இடிந்து விழுந்தன. அப்போது தான் பாடசாலை தொடங்கி மாணவ -மாணவிகள் வகுப்பறைகளில் இருந்தார்கள்.

ஒரு பாடசாலையில் மட்டும் 350 மாணவ- மாணவிகள் இடிபாடுகளில் சிக்கி உயிருடன் புதைந்து பலியானார்கள்.

இன்னொரு பாடசாலையில் 50 மாணவ- மாணவிகள் இடிபாடுகளில் சிக்கி பலியானார்கள்.

வடமேற்கு மாகாணத்தில் மட்டும் பூகம்பத்திற்கு, ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியாகி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது . அங்கு நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. பொதுமக்கள் பீதியடைந்து பெரும் கலக்கத்தில் உறைந்து போயுள்ளனர்.

## மீட்புப் பணியில் சீனா

பாகிஸ்தானில் பூகம்பத்தால் பாதிக் கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணியினை மேற் கொள்ள சீனாவிலிருந்து 49 பேர் அடங்கிய மீட்புக் குழுவினர் பாகிஸ்தானுக்கு விரைந்துள்ளனர் மீட்புக்குழுவில் மருத்துவ நிபுணர்களும், நிலநடுக்கஆய்வியல் நிபுணர்களும் இணைந்து மீட்புப்பணிக்காகச் சென்றுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

# சூறாவளியின் கோரத் தாண்டவம் கவுதமாலாவில் கிராமமே மண்ணில் புதைந்தது

(பனாபஜ்)

கவுதமாலாவில் வீசிய சூறாவளியின் கோரத் தாண்டவத்துக்கு பலியானோர் தொகை 1,000-இற்கும் மேல் தாண்டும் என்று அஞ்சப் படுகிறது. ஒரு கிராமமே மண்ணுக்குள் புதைந்து போனதில் 71 பேர் உயிரிழந்தனர்.

மத்திய அமெரிக்க நாடுகளில் சமீபத்தில் வீசிய சதான் சூறாவளி கடுமையாகத் தாக்கியது. இதனால் கன மழை பெய்து நிலச்சரிவுகள் ஏற்பட்டன.

மெக்சிக்கோ, கவுதமாலா, எல் சல்வாடோர், நிக்கரகுவா ஹொண்டுராஸ் ஆகிய நாடுகளில் பலத்த சேதம் ஏற்பட்டது. எல்சல்வடோர் மிகவும் பாதிக்கப்பட்டதாக முதலில் செய்திகள் வெளிவந்தன.

ஆனால் கவுதமாலா நாடே மிகவும் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளதாக தற்போது செய்திகள் வருகின்றன. அங்குள்ள பனாபஜ் அருகிலுள்ள ஒரு கிராமமே மண்ணில் புதைந்து கிடக்கிறது. சுமார் 40 அடி உயரத்துக்கு மண் குவிந்துள்ளது.

இதுபற்றி அப்பகுதி நகர மேயர் கூறுகையில், "பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டு 40 அடிக்கும் மேல் மண் மூடிக்கிடப்பதால் மீட்புப் பணியை துரிதப்படுத்த இயல வில்லை.ஏராளமான மக்கள் புதைந்து கிடக்கிறார்கள். 1,000-இற்கும் மேற்பட்டவர்கள் புதையுண்டு போயிருக்கலாம். எத்தனை பேர் இறந்தார்கள் என்பதை உறுதியாகக் கூற இயலாது" என்றார்.

சதான் சூறாவளிக்கு மத்திய அமெரிக்க நாடுகளில் 284 பேர் பலியானதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மீட்பு நடவடிக்கைகளில் உலங்குவானூர்திகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மலைகளில் இருந்து உருண்ட பாறைகளும், மரங்களும் விழுந்து கிடப்பதால் பல பகுதிகளுக்கு மீட்புக் குழுவினரால் சென்றடைய முடியாமல் தவிப்பதாகவும் தெரி விக்கப்படுகிறது.



சாண்டியாகோவில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கியவரை மீட்டு படையினர் தூக்கிச் செல்கின்றனர்.

## பங்களாதேஷில் மழைவெள்ளம் 16 பேர் பலி; ஐந்து இலட்சம் பேர் பாதிப்பு

பங்களாதேஷின் வடபகுதியில் பெய்த மழை மற்றும் வெள்ளத்திற்கு 16பேர் இறந்துள்ளனர். ஏராளமான பயிர்கள் மற்றும் வீடுகள் சேதமடைந்துள்ளன.இடைவிடாது பெய்த மழையால் ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. திடீர் வெள்ளத்தால் ஏராளமான வீடுகள் தண்ணீருக்குள் மூழ்கியுள்ளன. வீடுகள் இடிந்ததாலும் பாம்பு கடித்ததாலும் 16 பேர் இறந்துள்ளனர். பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். தொடர்மழையால்மண் சுவர்களால் கட்டப்பட்ட ஒரு இலட்சம் வீடுகள் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன. ஐந்துஇலட்சம் பேர் வீடுகளை இழந்து தவிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.





பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர் பகுதியில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களைஉலங்கு வானூர்தியில் மீட்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

## சீனாவில் பேருந்து விபத்து 20 பேர் பலி; 17பேர் காயம்

(பீய்ஜிங்)

சீனாவில் நடந்த பேருந்து விபத்தில் 20 பேர் பலியாகியுள்ளனர். மேலும் 17 பேர் காயமடைந்துள்ளனர். பேருந்தும்,காரும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. பேருந்தில் பயணம் செய்த இரண்டுபேரைக் காணவில்லை எனவும் அவர்கள் இறந்திருக்கக்கூடும் எனவும் அஞ்சப்படுகிறது.

## பாக்,இந்தியாவுக்கு அமெரிக்கா உதவி

(வோஷிங்டன்)

நிலநடுக்கத்தால் பாதிப்புக்குள்ளான பாகிஸ்தான் மற்றும் இந்தியாவுக்கு வேண்டிய உதவிகளை செய்ய ஏற்கனவே அமெரிக்கா ஆயத்தமாகிவிட்டதாக ஜோர்ஜ்புஷ் தெரிவித்துள்ளார். இன்னும் தேவைப்படும் உதவிகளை அமெரிக்கா தொடர்ந்து செய்யும் என்றும் அவர் தெரிவித்தார். ஏற்கனவே அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலிசாரைஸ் நட்வர் சிங்கை தொடர்பு கொண்டு அமெரிக்காவின் கவலையை வெளியிட்டுள்ளார்.



மெக்சிக்கோவின் லெம்பாஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தால் மக்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

## அல்-ஹைதா இயக்கத்திற்கு ஆட் தேவை இணையத்தளத்தில் விளம்பரம் வெளியீடு

(டுபாய்)

சர்வதேச தீவிரவாத அமைப்பான அல்-ஹைதா தங்கள் இயக்கத்தில் இளைஞர்களை சேர்த்துக்கொள்ள இணையத்தளத்தில் ஆட்கள் தேவை என விளம்பரங்களை வெளியிட்டுள்ளது.

இணையத்தள சேவையை கடந்த சில ஆண்டுகளாக அல்ஹைதா உள்ளிட்ட முஸ்லிம் தீவிரவாத இயக்கங்கள் பலவும், அதிகளவில் பயன்படுத்த தொடங்கிவிட்டன. அமெரிக்க இரட்டைக் கோபுரங்களை தகர்ப்பதற்கு இணையத்தளத்தையே தீவிரவாதிகள் பயன்படுத்தினர்.

இந்நிலையில் தங்களது இயக்கத்தை மேலும் பலப்படுத்துவதற்காக முஸ்லிம் இளைஞர்களுக்கு இணையத்தளத்தில் அல்-ஹைதா வலைவீசியுள்ளது. அல்-ஹைதாவுடன் தொடர்புடையகுளோபல் இஸ்லாமிக் மிடியா பிரண்ட் என்ற இணையத்தளம் மூலம் செயற்படும் அமைப்பு தங்களின் இணையத்தளத்தில் அல்-ஹைதாவுக்கு ஆட்கள் தேவை என்று விளம்பரங்களை வெளியிட்டுள்ளது. படத் தயாரிப்பு ஒருங்கமைப்பு உள்ளிட்ட பணிகளுக்கு ஆட்கள் தேவை என்று கேட்டுள்ளனர். சேர விரும்புவர்கள் எவ்வாறு தொடர்பு கொள்வது என்பது பற்றிய தகவல்களையோ சம்பள விபரங்களையோ வெளியிடவில்லை.

# சீர்திருத்தப் பிரிவிலுள்ள கைதிகளை ச.செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் பார்வை

(அலுவலக செய்தியாளர்)



கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ காவல்துறை சீர்திருத்தப்பிரிவில் உள்ள கைதிகளை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் கடந்த வாரம் நேரில் பார்வையிட்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் வியாழக்கிழமை வரை கைதிகளைப் பார்வையிட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதிகள் அவர்களுடைய நலன்களையும், தேவைகளையும் கேட்டறிந்ததுடன் கிளிநொச்சி சீர்திருத்தப்பிரிவுப் பொறுப்பாளர், உதவி ஆய்வாளர் ஆகியோருடனும் கலந்துரையாடிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)


# சிறந்த விவசாயிகள் முல்லையில் கௌரவிப்பு

(முல்லை)

முல்லைத்தீவு மாவட்ட சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு நாளை காலை 10.30 மணிக்கு முல்லைத்தீவு றோமன்கத்தோலிக்க வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சிறந்த விவசாயிகளையும் முல்லை மாவட்டத்திலுள்ள அனைத்து கமக்கார அமைப்பின் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறு முல்லை மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இச்சிறந்த விவசாயிகள் கௌரவிப்பினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் மாவட்ட விவசாயத் திணைக்களமும் இணைந்து நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (20)



உலக அஞ்சல் தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்புகூட எதுவித புனரமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்படாது சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பின் வடுக்களை தாங்கிநிற்கும் கிளிநொச்சி பிரதம தபாலகத்தினை படத்தில் காணலாம். (படம் சோதி)

# சர்வதேச உளநல தினம் சிறப்புற நடத்த ஏற்பாடு

## - அனைவரையும் பங்கேற்க அழைப்பு

(அலுவலக செய்தியாளர்)

**சர்வதேச உளநல தினம் கிளிநொச்சியில் முதன்முறையாக எதிர்வரும் 15 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. "உளநலமும் சமூகப்பார்வையும்" எனும் தொனிப்பொருளில் இது முன்னெடுக்கப்படுகிறது.**

மேற்படி தினத்தில் கருணாநிலையம், வெற்றிமனை மகளிர் இல்லம், சந்தோஷம் இல்லம், நிறைமதி இல்லம், அன்புச்சோலை மூதாளர் இல்லம் ஆகியவற்றின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்திலும், பிற்பகல் 4.00 மணிக்கு பொதுக்கூட்டமும் கலைநிகழ்வுகளும் கிளிநொச்சி கருணாநிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளதெனவும், இவ்வைபவத்தில் அனைவரையும் கலந்து எம் சகோதர சகோதரிகளின் நிகழ்விற்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கிடும் வண்ணம் நிகழ்வின் செயற்குழு இணைப்பாளர் உளநல மருத்துவர் வைத்திய கலாநிதி யூ.டி.ரமேஸ்குமார் வேண்டுகை விடுத்துள்ளார். (சோ)

# கருணாநிலைய பொன்விழா

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கருணாநிலையத்தின் பொன்விழா கருணாநிலையத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது.

பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற மியூரியல் வைலட் கட்கின்ஸ் அம்மையார் அவர்களால் 1955 ஆம் ஆண்டு மேற்படி நிலையம் ஆரம்பிக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.. (சோ)

# சுனாமியால் பாதிப்புற்றோருக்கு வீடமைக்க 2 ஆம் கட்ட நிதியுதவி

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களில் ஒரு பகுதியினருக்கு வீடமைப்பதற்கான முதற்கட்ட கொடுப்பனவு வழங்கப்பட்டு வேலைகள் நிறைவடைந்துவரும் நிலையில் இரண்டாம் கட்ட கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது.

சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களில் 2544 பேருக்கு உலக வங்கியின் நிதியுதவியில் முதற்கட்ட கொடுப்பனவான 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இக்கொடுப்பனவின் மூலம் முதற்கட்ட வேலையாக அத்திவாரம் அமைத்தலை மக்கள் முடித்துக் கொண்டுள்ளனர். இந்த வகையில் அவர்களுக்கான இரண்டாம் கட்ட கொடுப்பனவு வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக முல்லை- மாவட்ட வடகிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாண பிரதித் திட்டப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (20)

# புதிய தபால் மா அதிபர் உறுதிமொழி!


(முல்லை)

வடமாகாண தபால்மா அதிபராக வி.குமரகுரு கடந்த வாரம் பதவியேற்றுள்ளார். இவர் இதுவரை காலமும் யாழ். மாவட்ட தபாலதிபராகக் கடமையாற்றினார்.

இவர் சுனாமியினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட தபால் அலுவலகத்திற்கு தமது திணைக்களத்திற்குட்பட்ட அனைத்து உதவிகளையும் வழங்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (20)

# பன்னங்கண்டிப் பாலம் துரிதகதியில் புனரமைப்பு

கிளிநொச்சி பன்னங்கண்டி வீதியில் பழுதடைந்த நிலையில் காணப்பட்ட பாலத்தை நீர்ப்பாசனத் திணைக்கள உதவியுடன் தமிழீழ நிர்வாக சேவை, தமிழீழ ஊரக வளர்ச்சிப் பணி மற்றும் பன்னங்கண்டி மக்கள் ஆகியோர் ஒன்றிணைந்து புனரமைப்புச் செய்துள்ளனர். நீண்ட காலமாக பலத்த சிரமத்தின் மத்தியில் தமது அன்றாடப் பணிகளை மேற்கொண்ட மக்களுக்கு இந்த நடவடிக்கை பேருதவியாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# பாராமுகமாகவிருந்த பள்ளிக்குடா வீதி கடற்றொழில் சங்கத்தால் புனரமைப்பு

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள மன்னார் வீதியில் இருந்து செல்லும் பள்ளிக்குடா பிரதான வீதி 750 மீற்றர் தூரம் மட்டும் கல் போட்டு தார் ஊற்றப்பட்டுள்ளது. மிகுதியாக உள்ள 2500 மீற்றர் நீளமான வீதி குன்றும் குழியுமாகப் பயணிகள் பிரயாணம் செய்ய முடியாது காணப்பட்டது. இதுவிடயமாக உரிய அதிகாரிகளிடமும், பொது நிறுவனங்களிடமும் மக்கள் வேண்டுகோள் விடுத்தும் எதுவித பலனும் கிடைக்காதபட்சத்தில் பள்ளிக்குடா கடற்றொழிலாளர் சங்கம் ரூபா ஒரு இலட்சத்திற்கு மேற் பட்ட வகையில் பணம் கொடுத்து மண் பறித்து வீதியைப் புனரமைத்துள்ளனர். இது விடயமாக மக்கள் தமது கவலையை உரிய அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளனர். (34)



# கணினி கற்கை நிறைவில் சான்றிதழ் வழங்கல்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சியில் அமைந்துள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப் பணியகத்தில் இயங்கிவரும் ஓ.ஜி.ஆர் நிறுவன கணினிப்பயிற்சி நிலையத்தில் கணினி கற்கை நெறிகளை நிறைவு செய்த 61 கற்கையாளர்களிற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் பொரு ண்மிய மேம்பாட்டு நிறுவனத் திட்ட அலுவலர் சி.அமிர் தலிங்கம் தலைமையில் நடைபெற்றது.




இந்நிகழ்வில் மங்கல விளக்கினை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து அரங்க நிகழ்வுகளின் தலைமையுரையை அடுத்து கருத்துரைகளை கிளிநொச்சி மாவட்ட தொழிநுட்பக் கல்வி நிறுவன அதிபர் க.சோதி முருகேசு, தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர் சி.கரிகாலன் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் ஆகியோர் உட்பட பலர் நிகழ்த்தினர்.

அடுத்து கற்கை நெறிகளை நிறைவு செய்த கற்கையாளர்களிற்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. சான்றிதழ்களை கிளிநொச்சி மாவட்ட அரசஅதிபர், கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக்கல்வி நிறுவன அதிபர், செஞ்சோலை பொறுப்பாளர் செல்வி ஜெனனி, பாராளுமன்ற உறுப்பினர், பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப்பொறுப்பாளர் சின்னண்ணா, வட்டக்கச்சி மகாவித்தியாலய உப அதிபர் திருமதி பொன்னுத்துரை, கணினி பயிற்சி நிலைய பொறுப்பாளர் திருமதி வி.சாருமதி, கணினிப் பயிற்சி ஆசிரியர்கள் திருமதி "க.பொன்மணி, தமிழ்வாணி ஆகியோர் வழங்கினர்.

கற்கை நெறியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் சிறப்புப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வின் நன்றியுரையை பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப்பணியக நிர்வாக அலுவலர் திருமதி மதி நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் துறை சார்ந்த பொறுப்பாளர்கள், கற்கையாளர்கள், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.(15, 46)

# மார்க்க பிரச்சினையில் துப்பாக்கிச் சூடு; காத்தான்குடியில் ஒருவர் காயம்

காத்தான்குடி அரபிக் கலாசாலை வீதியில் உள்ள சாலிகின் பள்ளிவாசல் முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் கே.எஸ்.வாகித் (வயது-49) என்பவராவார். இவர் தற்போது மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். காத்தான்குடியில் தனியான மார்க்க மொன்றைக் கடைப்பிடித்து வரும் பயில்வான் என்பவரின் காரியாலயத்தில் படுகாயமடைந்தவர் காவலாளியாக கடமையாற்றுபவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# விவசாய நடவடிக்கைகளுக்கு சிறிலங்கா படையினர் தடை!

**- பிரதேச செயலரிடம் அரியாலை மக்கள் முறைப்பாடு**

(யாழ்ப்பாணம்)

**யாழ்.அரியாலை கிழக்கில் படையினரால் விடுவிக்கப்பட்ட வயல்நிலங்களில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான கூலியாட்களை அழைத்துச் செல்ல சிறிலங்காப் படையினர் தடை விதித்துள்ளனர்.**

அரியாலை கிழக்கில் உள்ள மேற்படி வயல்நிலங்கள் அண்மையில் படையினரது பாதுகாப்பு வலயத்துள் இருந்து விவசாய நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்டாலும் அந்நிலங்கள் அரியாலையில் உள்ள இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயத்தை அண்டிய பிரதேசத்திலேயே உள்ளதால் இங்கு கூலியாட்களை வர அனுமதிப்பது தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதைக் காரணம் காட்டியே படையினர் கூலியாட்களை அழைத்துச் செல்லத்தடை விதித்துள்ளனர்.

இவ்வாறாக இராணுவத்தினர் விதித்துள்ள தடைகளால் அரியாலை கிழக்கில் இராணுவ அதிஉயர் பாதுகாப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட சுமார் 100 ஏக்கர் வயல் நிலங்களில் செய்கைபண்ண முடியாத நிலைமை தோன்றியுள்ளதாக அப்பகுதி விவசாய காணிகளின் உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அக்காணிகளின் உரிமையாளர்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான கூலியாட்களை அழைத்துச் செல்ல அனுமதி பெற்றுத் தருமாறும் நல்லூர் பிரதேச செயலாளரிடம் கோரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளனர். (32)

# யாழ். இல் உலக வங்கியின் நிதியுதவியுடன் அடுத்த ஆண்டு4,000 வீடுகள் அமைக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் நிதியுதவியுடன் 2006 ஆம் ஆண்டில் யாழ். மாவட்டத்தில் 4,000 வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன என உலக வங்கியின் வடக்குக்கிழக்கு வீடமைப்புத்திட்டப்பணிப்பாளர் செ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்தகால யுத்தநடவடிக்கைகள் காரணமாக வீடுகளை முற்றாக இழந்த அல்லது வீடுகள் சேதமான குடும்பங்களைச்சேர்ந்த மக்களுக்காகவே இந் 4,000 வீடுகளும் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தில் பயன் பெறவுள்ள பயனாளிகள் தெரிவுகள் பிரதேச செயலகங்களூடாக பாதிப்புக்களின் அடிப்படையில் இடம் பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை உலக வங்கியின் வடக்கு,கிழக்கு வீடமைப்புத் திட்டத்தின் கீழ் தற்பொழுது 1000 வீடமைப்புத்திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (33)

– புனரமைப்பு பணிகளுக்காக –

# பண்ணைப் பாலமூடான போக்குவரத்து 15 முதல் நிறுத்தம்!

யாழ். பண்ணைப் பாலமூடான தரைவழிப் போக்குவரத்துப் பாதை எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் மூடப்படவுள்ளது.

பண்ணைப்பாலத்தின் மீள்நிர்மாண வேலைகளுக்காகவே இப்பாதை மூடப்படவுள்ளது. இவ்வாறு பண்ணைப் பாலமூடான தரைவழிப் போக்குவரத்துப் பாதை மூடப்பட்டிருக்கும் காலத்தில் பண்ணைப்பால மருங்குகளிலுள்ள கடல் வழியாக பண்ணைப்பாலமூடான தரைவழிப் பயணத் தூரத்தைக் கடப்பதற்கான படகுச் சேவைகளை நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதற்கு ஏற்ற விதத்தில் யாழ்.நகரில் இருந்து பண்ணைப் பாலத்தின் இக்கரை வரையில் ஒரு பேருந்து சேவையையும் பால இடைவெளியின் மறுகரையில் இருந்து தீவகப் பகுதிகளுக்கான பேருந்து சேவைகளையும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (33)

# சனாதிபதித்தேர்தலுக்காக விசேட பொலிஸ் அணி

*யாழ். வரவழைக்க ஏற்பாடு*

(யாழ்ப்பாணம்)

சனாதிபதித்தேர்தலை ஒட்டி யாழ்ப்பாணத்துக்கு விசேட பொலிஸ் அணி ஒன்று வரவழைக்கப்படவுள்ளதாக யாழ். பொலிஸ்நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் சனாதிபதித்தேர்தலை ஒட்டி யாழ். குடாநாட்டில் ஏற்படக் கூடிய வன்முறைகளைக் கட்டுப் படுத்துவதற்கும், தேர்தல் காலத்தில் வாக்குச்சாவடிகளுக்குப் பாதுகாப்பளித்தல், வாக்குச்சீட்டுக்கள் எண்ணப்படும் நிலையங்களுக்குப் பாதுகாப்பு வழங்கல் போன்ற கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு மேலதிகமாக பொலிசார் தேவைப்படுகின்றனர்.

இந்தத்தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்காகவே இவ் விசேட பொலிஸ் அணி யாழ்ப்பாணத்துக்கு வரவழைக்கப்படவுள்ளதாக பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாண பொலிஸ் தலைமையகத்தின் வேண்டுகோளுக்கு அமைவாகவே இப்பொலிஸ் அணி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது. (33)

# சிறுவர் தின விழா

கொக்குவில் வளர்மதி நிறை வாழ்வகத்தினால் சர்வதேச சிறுவர் தினவிழா மிகவும் சிறப்பான முறையில் கொக்குவில் வளர்மதி முன்னேற்றமகளிர் குழுத் தலைவி செல்வி கமலநாயகி கதிர்காமலிங்கம் (அதிபர்) தலைமையில் இடம் பெற்றது

பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதிகளான ந.அரவிந்தன், திருமதி சுபாசினி அரவிந்தனும், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் சு.புண்ணியசீலனும் செல்வன் கி.மயூரன் (அகில இலங்கை கணிதப் பிரிவு முதலாம் இடம்பெற்றவர்) செல்வன் பொ.சிவபாலனும் (அகில இலங்கை உயிரியல் பிரிவு இரண்டாம் இடம்பெற்ற மாணவனும)கலந்து கொண்டார்கள். (41)




**29.09.2005**
**05.10.2005**

**29**

☐ அமெரிக்காவினால் தடுத்த வைக்கப்பட்ட ரைம்ஸ் பத்திரிகையாளர் யூலின்மிளர் விடுதலை.



☐ அமெரிக்க கலிபோர்னியா மாநிலத்தில் பரவிய காட்டுத்தீயின் காரணமாக 25 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பு எரிந்து சாம்பல்.



☐ஈராக்கின் மத்திய பகுதியில் உள்ள சியா முஸ்லிம் பிரதேசமான பலத்நகரில் இடம்பெற்ற மூன்று குண்டுத்தாக்குதலில் 85பேர் பலி; 110 பேர் காயம்.

**30**

☐ இந்தியாவின் மேகாலயா மாநிலத்தில் மாணவர்கள் நடத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் போது பொலிசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 11பேர் பலி; 90 பேர் காயம்.

☐ "கற்றினா" சூறாவளி அனர்த்தங்களால் நியூ ஓர்லியன்ஸைவிட்டு வெளியேறிய ஆயிரக்கணக்கான மக்கள் தமது இருப்பிடங்களை நோக்கித் திரும்ப ஆரம்பம்.

**01**


☐ ரஷ்யாவில் பீரங்கிக் குண்டுகள் சேமித்து வைத்திருக்கும் கிடங்கில் திடீரென தீ விபத்து ஏற்பட்டதையடுத்து பீரங்கி மற்றும் வெடி மருந்துக் கிடங்குகளில் வேலைசெய்வோர் உட்பட ஏழாயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.

☐ நேபாளத்தில் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 500 மாணவர்கள் மற்றும் 36 ஆசிரியர்களை மாவோயிட்ஸ் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர்.

☐ ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் அமெரிக்க வீரர் ஒருவரும் ஆப்கான்வீரர் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

☐ "சோயூஸ்" விண்கலம் கஜகஸ்தான் செய்மதி நிலையத்திலிருந்து சர்வதேச விண்வெளி நிலையத்தை நோக்கிப் பயணத்தை ஆரம்பித்தது.

☐ எல்-சல்வடோரில் இலாமெட்டி பெக் எனும் எரிமலை குமுறத் தொடங்கியது. இந்த அனர்த்தங்களால் இருவர் பலியாகினர்; ஆயிரக்கணக்கான குடிருப்பாளர்கள் அப்பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.



**02**

☐நியூயோர்க் நகர வாவியொன்றில் சுற்றுலாப் பயணிகள் பயணித்த ஆடம்பரப் படகொன்று விபத்துக்குள்ளாகியதில் 21 பேர் பலியாகினர்.

☐ கஜகஸ்தானின் தலைநகர் டுஷான்பேயிற்குத் தெற்குப் பகுதியில் திரவமாக்கப்பட்ட வாயுவில் இயங்கும் பேருந்து ஒன்று மற்றொரு பேருந்துடன் மோதியதில் 21 பேர் பலி.

☐ இந்தோனேஷியா பாலியில் உள்ள சுற்றுலாத் தளமான குடாவில் உள்ள முக்கிய இரண்டு இடங்களில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 25 உல்லாசப் பயணிகள் பலி; 51 பேர் படுகாயம்.




☐தைவான் நாட்டை "தைபூன்" சூறாவளி தாக்கியதன் காரணமாக வீடுகளிலுள்ள யன்னல்கள் உடைந்து 34 பேர் காயமடைந்தனர்.

**03**

☐இந்திய மத்திய பிரதேச மாநிலம் வாரணாத் அருகே ஏற்பட்ட புகையிரத விபத்தில் முப்பதிற்கும் மேற்பட்டோர் பலி; 40 இற்கும் மேற்பட்டோர் காயம்.

☐ வத்திக்கானில் அகில உலக கிறிஸ்தவ மதபிஷப்புக்கள் கார்டினால்கள் கூட்டத்தை போப் 16 ஆவது பெனடிக்ட் சிறப்புப் பிரார்த்தனை மூலம் தொடக்கி வைத்தார்.



☐ பங்களாதேசத்திலுள்ள சந்த்பூர், லட்சுமிபூர், சிட்டகொங் ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள நீதிமன்றங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் நான்கு பேர் பலி; 40 பேர் காயம்.

☐ ஈராக் எண்ணெய் வளத்துறை அமைச்சர் இப்ராகிம் பகர் அல்-உலோமை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் பாதுகாவலர் மூவர் பலி, அமைச்சர் அதிஷ்டவசமாக உயிர் தப்பினார்.

☐ இந்தியாவின் ஆகாஷ் ஏவுகணை மூன்றாவது முறையாகச் செலுத்தி சோதிக்கப்பட்டது.

☐ சீனாவின் வடமேற்குப் பகுதியிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்கள் இரண்டில் ஏற்பட்ட விபத்தில் 30 பேர் பலியாகினர், பலர் காணாமல் போயுள்ளனர்.

**04**

☐மெக்ஸிக்கோ வளைகுடாவில் உள்ள கரையோர நாடுகளை "ஸ்டான்" புயல் காற்று தாக்கியதில் 61 பேர் கொல்லப்பட்டும் மேலும் பலர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

☐ அயர்லாந்தில் உள்ள பெரிய புரட்டஸ்தாந்து கெரில்லா இயக்கத்தின் முன்னாள் தலைவர் ஜிம்கிரே-சுட்டுக்கொலை.

☐ பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்குமிடையிலான எல்லையை ஊடறுக்கும் முக்கிய பாதை ஒன்றில் குண்டொன்று வெடித்ததில் ஆறு பொது மக்கள் பலி.

**05**

☐ஈராக் தலைநகர் பாக்தாத்திற்குத் தெற்கேயுள்ள ஹில்லா என்ற இடத்திலுள்ள ஷியா முஸ்லிம்களின் பள்ளிவாயிலின் நுழைவாயிலில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 25 பேர் பலி, 90 பேர் படுகாயம்.



☐ இந்தியா "திரிஆல்" என்ற குறுந்தூர ஏவுகணையை வெற்றிகரமாக ஏவியது.

☐ ஆப்கானிஸ்தானில் தற்கொலைக் குண்டுதாரியொருவர் நடத்திய கார்க்குண்டு தாக்குதலில் இருவர் பலி, மூன்று பேர் காயம்.

# மகிந்தவின் நிலைப்பாட்டில் தடுமாற்றமா?

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தற்போது ஓரங் கட்டப்பட்டுள்ளார். அவரின் அரசியல் முடிந்து விட்டது. இப்போது அவருக்கு யாரும் ஆதரவளிக்க மாட்டார்கள் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவு சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் ஜே.வி.பி கட்சியினரும் நம்பியிருப்பர். உண்மையில் அவரது அரசியல் வாழ்வு முற்றுப் பெறவில்லை. அதற்கு முற்றுப்புள்ளி வைக்கவும் ஒருவரும் கிடையாது என்பதை ராஜபக்ஷ நன்கு புரிந்து கொண்டிருப்பார்.

காரணம் 1982 ஆம் ஆண்டு சனாதிபதித்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளராக நிறுத்திய ஹெக்டர் கொப்பேகடுவ கட்சித்தலைவி சிறிமாவோவை மறந்துவிட்டு கட்சித் தலைமை தன்னிடம் இருப்பதாகக்கருதி செயற்பட்டபோது மகிந்தராஜபக்ஷ சிறிமாவோவை நெருங்கி அவருக்கு ஆதரவாக செயற்பட்டமையாகும். அந்த நேரத்தில் சிறிமாவோவின் அரசியல் முடிந்து விட்டதாகக் கருதியோரும் இருந்தனர். ஆனால் மகிந்த ராஜபக்ஷ அதற்கு அஞ்சாமல் இருந்தார்.

கொப்பேகடுவ சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கைச் சின்னத்தில் போட்டியிட தடை விதிக்கப்பட்டபோது அவர் மக்கள் ஐக்கிய முன்னணியின் சின்னமான சக்கரச் சின்னத்தில் போட்டியிட முயன்றார். அதற்கும் தடை விதிக்கும் நோக்கில் அக்கட்சித் தலைவர் தினேஷ் குணவர்தனவிடம் தூது சென்றவர் மகிந்த ராஜபக்ஷவாகும். இதனாலேயே கொப்பேகடுவவுக்கு ராஜபக்ஷ மீது ஆத்திரம் ஏற்பட்டது. அத்துடன் கொப்பேகடுவ சனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டமைக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் கூட்டம் ஒன்று றோஸ்மீட்வாசஸ் தலத்தில் நடைபெற்ற போது அநுராவின் ஆதரவாளர்களோடு சென்ற மகிந்தவை கண்ட கொப்பேகடுவ பாராமுகம் காட்டினார். அத்துடன் தேர்தலுக்குப் பின்னர் உன்னைக் கவனித்துக் கொள்கிறேன் என்றும் கூறியுள்ளார். அது சிறிமாவோவுக்கு மகிந்த ஒப்பந்த வேலை செய்ததினாலாகும் எனினும் சிறிமாவோ மகிந்தவைக் கைவிடவில்லை. காரணம் தவறு கொப்பேகடுவவினால் அன்றி சிறிமாவோவினால் அல்ல என்பதை நன்கு உணர்ந்ததனாலாகும்.


ஆயினும் அந்தத் தவறுயாது?

அந்தத்தவறு சிறிமாவோவின் அனுமதியின்றி அவரை விமர்சித்த கம்யூனிஸ்ட் கட்சியில் கொப்பேகடுவ இணைந்தமையாகும். 1976 ஆம் ஆண்டு சிறிமாவோவின் கூட்டு முன்னணி அரசிலிருந்து விலகிய கம்யூனிஸ்ட் கட்சியினர் நாடு தழுவிய ரீதியில் சிறிமாவோவுக்கு எதிராகச் செயற்பட்டனர். அப்படிப்பட்டவர்களுடனேயே கொப்பேகடுவ கைகோர்த்து நின்றார். அதுமட்டுமன்றி சிறிமாவோ ஒரு ஏகாதிபத்தியவாதி எனத் தெரிவித்து அவரின் கட்சித்தலைமையை நீக்கக் கோரி நீதிமன்றம் சென்ற மைத்திரிபால சேனநாயக்க குழுவினருடனும் கொப்பேகடுவ இரகசிய உடன்படிக்கை ஒன்றைச் செய்தார். அந்த ஒப்பந்தப்படி கொப்பேகடுவ மைத்திரிபால சேனநாயக்காவுக்கு பிரதமர் பதவி வழங்க திட்டமிட்டிருந்தார். சிறிமாவோவை அரசியலிருந்து ஒழித்துவிட மேடைகள் தோறும் அவரைத் தாழ்த்தி பிரச்சாரத்தை மேற்கொண்ட மைத்திரிபால சேனநாயக்கவை சனாதிபதித்தேர்தல் பிரச்சாரங்களில் தனது அனுமதியின்றி இணைத்துக் கொண்டதையும் சிறிமாவோ பொறுக்கவில்லை. கொப்பேகடுவ சனாதிபதித்தேர்தலில் வெற்றி பெற வேண்டுமாயின் அனைவரினதும் ஒத்துழைப்புத் தேவை. என்றாலும் அதனைப் பெறுவதற்கு முறையொன்றிருப்பதை சிறிமாவோ சிந்தித்தார். கம்யூனிஸ்ட் கட்சியினதும் மைத்திரிபால சேனநாயக்கவினதும் ஆதரவு தேவையெனில் அதைப் பெறும் அதிகாரம் சிறிமாவிடம் கையளிக்க வேண்டியிருந்தது. அதற்காக உடன்பாடு ஒன்று காண வேண்டியேற்பட்டது.

இவ்வாறிருந்த போதிலும் சிறிமாவை புறந்தள்ளிவிட்டு கொப்பேகடுவ அவரின் முகத்தில் அறைந்த மாதிரி அவருக்கு எதிரானவர்களிடம் கைகோர்த்து நின்றதை மகிந்தராஜபக்ஷ கட்சிக்கும் தலைமைத்துவத்துக்கும் செய்யும் துரோகமாகவே அன்று கருதினார். அதனாலேயே மகிந்த சிறிமாவோவை விட்டுப் பிரிந்து விடாமல் இருந்தார். கொப்பேகடுவ வெற்றி பெற்றால் தனது அரசியல் வாழ்வு முடிந்து விடும் என்று கருதினாலும் அவர் சிறிமாவோவை விட்டுப் பிரியவில்லை. மனச்சாட்சியுடன் பணியாற்றினார்.

ஆக கொப்பேகடுவவின் சனாதிபதித் தேர்தல் சமயத்தில் மகிந்த அநுராவினதும் சிறிமாவினதும் உத்தரவிற்கிணங்கவே நடந்து கொண்டார். அவர் மட்டுமன்றி சில அமைப்பாளர்களும் அவர்களுக்கு ஆதரவாகவே செயற்பட்டனர்.

தேர்தலில் கொப்பேகடுவ தோல்வியைச் சந்தித்தார். அத்துடன் மகிந்தவின் சகோதரர் பசில் ராஜபக்ஷ ஐ. தே. கட்சியில் இணைந்தார். அப்போது அவர் ஊடகத்துறையினருக்கு பேட்டியளித்த போது சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியிலிருக்கும் போது தென்பகுதி மக்களுக்கு எந்தப்பணியையும் செய்யவில்லை என்றும் கொடுத்த வாக்குறுதிகள். யாவும் பொய் என்றும் ஐ.தே.கட்சி எம்.பிக்கள் மக்களுக்காக சேவை செய்வதாகவும் அதனா லேயே தான் அக் கட்சியில் இணைந் ததாகவும் தெரிவித்தார்.



நன்றி: – லங்காதீப

இவரின் கட்சித் தாவல் அக் காலப்பகுதியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. கொப்பேகடுவவுக்கு ஆதரவாக செயற்பட்ட விஜயகுமாரதுங்க ஓசி அபேகுணவர்த்தன போன்றோர் நக்சலைட்டுகள் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டனர்.

அதன்பின்னர் நடைபெற்றகருத்துக்கணிப்பின் பின்னர் சுதந்திரக்கட்சியின் தலைமைப் பொறுப்பை சிறி மாவோ கைப்பற்றினார். கொப்பேகடுவ குழப்பத் துக்குள்ளானார். அத்துடன் கொப்பேகடுவவை வெற்றிபெறப் பாடுபட்டவரும் சிறிமாவோவை ஒதுக்கி விட்டவருமான இலங் கரத்ன சிறிமாவின் முகத்தில் விழிக்க முடியாது மௌனமானார். ரட்ணசிறி விக்கிரமநாயக்கவும் கொப்பேகடுவவின் தோல்வியின் பின்னர் ஓரம் கட்டப்பட்டார். ஆயினும் இதற்கு சிறிமாவோ தண்டனை வழங்குவார் என்று தெரிந்தே வைத்திருந்தனர்.

அந்த நாட்களில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உட்பூசல் பற்றி விஜயகுமாரதுங்க தனது குறிப்பில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். 1983 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஒருநாள் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அலுவலகம் மூடப்பட்டுள்ளது என்றும் அடுத்தநாள் றோஸ்மீட் பிளேசிலுள்ள சிறிமாவோவின் இல்லத்தில் வந்து உறுப்பினர்கள் பதவியேற்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி 12 வருடங்களாக கட்சியின் செயலாளராகப் பணியாற்றிய ரட்ண சிறிவிக்கிரமநாயக்க உள்ளிட்ட மேலும் சிலர் றோஸ்மீட் இல்லம் சென்றவேளை வாயில் கதவு திறக்கப்படவில்லை. அடுத்தநாள் அவர்கள் அவ்வப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக கடிதம் அனுப்பப்பட்டது. இது சிறிமா வழங்கிய தண்டனையாகும். அதேவேளை தமக்கு ஆதரவளித்தவர்களுக்கு அவர் புதிய பதவிகளையும் வழங்க மறக்கவில்லை. அதன்படி மகிந்தவுக்கும் உயர் பதவியொன்று வழங்கப்பட்டது.

எனவே இவற்றை மறந்துவிடாததாலேயே மகிந்த ராஜபக்ஷ சந்திரிகாவின் அரசியல் வாழ்க்கை முற்றுப் பெற்றுவிட்டதை ஏற்க முடியாதுள்ளார். ஆகவே சந்திரிகா யாருக்கு தண்டனை வழங்குவார், யாரை ஆதரிப்பார் என்பது தேர்தல் முடிந்த பின்பு தெரிய வரும். பொதுத்தேர்தலில் கட்சி வெற்றிபெற்றால் கட்சித் தலைவி அவரே. அன்று சிறிமாவோவின் உடல்நலக் குறைபாடும் தாய் - மகள் என்ற உறவு முறையினாலுமே கட்சித் தலைமை சந்திரிகாவிடம் வழங்கப்பட்டது. எனினும் கட்சியின் செயலாளரை நீக்க அவருக்கு முடியவில்லை. புதியவர்களை நியமிக்கவும் முடியவில்லை. அந்த வகையில் மகிந்த ராஜபக்ஷவும் நிறைவேற்றதிகார சனாதிபதியாகப் பதவியேற்றாலும் சந்திரிகாவை கட்சித் தலைமைப் பதவியிலிருந்து அகற்ற முடியாது. ஏனெனில் 1994 ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலில் சந்திரிகா வென்றபோதும் கட்சித் தலைமைப் பதவி சிறிமாவிடமே இருந்தது. அவர் தனது உடல்நலம் மற்றும் மகள் என்ற உறவு என்பவற்றின் காரணமாக பின்னர் தலைமைப் பதவியை சந்திரிகாவிடம் கையளித்தார்.

அத்துடன் மகிந்த வென்றாலும் கட்சிக்குள் சிறைக்கைதியாக சந்திரிகாவை வைக்கவோ அல்லது நீக்கவோ தலைப்பட்டால் சந்திரிகா மகிந்த மீது கட்சியில் ஊழல் மோசடி செய்தார் என்று குற்றம் சாட்டி அவருக்கெதிராக நம்பிக் கையில்லாத் தீர்மானத்தையும் கொண்டு வரலாம்.

இதற்கு உதாரணமாக பிரேமதாசா ஜே.ஆர்.தொடர்பை விளக்கலாம். ஜே.ஆர், பிரேமதாசாவை சனாதிபதி வேட்பாளராக நியமித்த போதும் பிரேமதாசா ஜே.ஆரின் ஆதரவாளர்களுடன் இணைந்து செயற்பட்டார். எனினும் பதவியேற்றதும் தன்னை ஓரம்கட்ட நினைத்தவர்களை அவர் பழிவாங்கினார். ஆனால் அவர்கள் ஜே.ஆரைக் கைவிடாமல் பாதுகாப்பு அளித்தனர்.

அதேபோன்று மகிந்த வென்றாலும் தோற்றாலும் சந்திரிகாவின் அரசியலை அழிக்கமுடியாது. இதனை மகிந்த புரிந்துகொண்டு ஜே.வி.பி, ஹெல உறுமய கட்சிகளை மறந்து சந்திரிகாவுடன் இணைந்து செயற்பட இன்னும் காலம் கடந்துவிடவில்லை. அப்போது அவர் தேர்தலில் வென்றாலும் தோற்றாலும் அவரின் அரசியல் அழியாது.

உப்புள் ஜோசப் ப்ர்னாந்து
(லங்காதீப)
தமிழில் வடிவேல்

## சுவரொட்டி அகற்றும் பொலிசாருக்கு அரசியல்வாதிகள் மிரட்டல்

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட தினத்தினுள் தேர்தல் சட்டவிதிகளை மீறி ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளையும் கட்அவுட்களையும் அகற்றிய பல சிறிலங்காப் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக பல்வேறு அரசியல் ரீதியிலான அழுத்தங்கள் விடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அச்சுறுத்தலை சில அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் விடுத்துள்ளதாக தெரியவந்துள்ளது.சில அரசியல்வாதிகள் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரிகளை மிக மோசமாகத் பேசியிருப்பதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.எந்தத் தடை வந்தாலும் சுவரொட்டிகளையும் கட்அவுட்களையும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்த அந்த அதிகாரி. வரும் நாட்களில் இவ்விதம் அச்சுறுத்தல் விடுபவர்களுக்கெதிராகவும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

## தனியார் ஊடகங்களைக் கட்டுப்படுத்த தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் போதாது

(கொழும்பு)

தனியார் ஊடகங்களைக் கட்டுப்படுத்தல் உட்பட பல விடயங்கள் தொடர்பில் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் போதுமானதாக இல்லை என்று சிறிலங்கா தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க கவலை தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா தேர்தல் ஆணையாளருக்கான அதிகாரங்களைப் பயன்படுத்தி செயற்படுகையில் எந்தவொரு வேட்பாளருக்கேனும் அநீதி இழைக்கப்படுமாயின், அவர் உயர்நீதிமன்றத்தில் உரிமை மனுவைத் தாக்கல் செய்யலாம்.

சிறிலங்கா அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தத்திற்கமையவும், சனாதிபதித் தேர்தல் சட்டத்திற்கமையவும் தனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தினை முழுமையாகப் பயன்படுத்தி சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை தான் நடத்த உள்ளோம்.

இருப்பினும் தனியார் ஊடகங்களைக் கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட பல விடங்களில் தற்போதைய அதிகாரங்கள் போதுமானதாக இல்லை.

தேர்தல் நடவடிக்கைகளின்போது மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளால் எந்தவொரு வேட்பாளரது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக தலைமை நீதிமன்றம் தீர்மானித்து அவருக்கு நியாயம் வழங்குமாறு உத்தரவிடுமாயின் அந்த உத்தரவை உடனடியாகச் செயற்படுத்தி குறிப்பிட்ட நபருக்கு நியாயம் வழங்க நடவடிக்கை எடுப்போம் என்றார்

# மண்காக்க மரணித்த முதல் பெண் புலி மாலதி



**தமிழீழ** விடுதலைப் போரின் சமகாலத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்த சமூக விடுதலைப்பணி எம் தேசியத் தலைவரின் பல நோக்கு சிந்தனையின் அடித்தளம். எம் இனத்தில் புரையோடிப் போயிருந்த பெண்ணடிமைத்தனம் மிக மோசமான சமூக அடக்கு முறையாய் இருந்தது. அப்படிப்பட்ட ஒரு காலத்தில் வீறுகொண்டெழுந்த எமது விடுதலைப் போர் பெண்ணடிமைத்தனத்தையும் உடைத்தெறிந்து கொண்டு உருப்பெறலானது. அதற்கு சான்றாய் 1984 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விடுதலைப்புலிகள் இயக்கம் பெண்களையும் விடுதலைப் போராட்டத்தின் நேரடி பங்காளிகளாக்கி ஒரு வரலாற்று திருப்பத்தை ஏற்படுத்தியிருந்தது.

விழிப்பு பெற்ற பெண்கள் சமூகத்தின் புது வரவாக அணிதிரண்ட பெண்புலிகள் கூட்டத்தில் ஒருத்தியாக இருந்தவள் தான் இரண்டாம் லெப். மாலதி. தமிழீழ விடுதலைப் போரில் முதன் முதல் பெண் புலியாய் வீரச்சாவடைந்து தமிழீழ பெண்களுக்கு மட்டுமல்ல உலகத்தமிழ் சமூகத்தையே உற்று நோக்க வைத்தவள் இந்த மாலதிதான் என்றால் மறுப்பதற்கு இல்லை.

மன்னார் மாவட்டத்தின் ஆட்காட்டி வெளி எனும் சிற்றூரில் பெண் குழந்தையாய் பிறப்பெடுத்து வளர்ந்த இந்த மாலதி காலவோட்டத்தில் தமிழீழ விடுதலைப் போரின் அவசியத்தால் ஈர்க்கப்பட்டு விடுதலைப் புலிப்பெண்ணானாள். பெண்கள் புரட்சிகர சிந்தனை கொண்டவர்களாய் இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்களால் விடுதலை பெற முடியும் எனப் புரிந்து கொண்டு செயற்பட்டாள் மாலதி. தமிழீழ விடுதலைப் போரில் பெண்கள் சகல விதத்திலும் பங்களிக்க வேண்டும். இப்போராட்டத்தில் எத்தகைய தியாகத்திற்கும், அர்ப்பணிப்பிற்கும் துணிய வேண்டும் எனும் தீவிர போராட்ட எண்ணம் கொண்டவளாகவும் இம் மாலதி திகழ்ந்துள்ளார்.

தனக்கு கொடுக்கப்படுகின்ற கடமைகளை சரிவரச் செய்வதுடன் வேலைகளை இயன்ற வரை நேர்த்தியுடனும் சலிப்படையாது செய்வாள். சக போராளிகளுடன் கலகலப்பாக பழகக் கூடியவள். திடமான மனவுறுதியும் உடலுறுதியும் கொண்ட மாலதி, ஏனைய போராளிகளும் அப்படியாக இருக்க விரும்புவாள்.

இவள் பங்கு கொண்ட தாக்குதல்களில் யாழ்ப்பாணத்தில் உள்ள தொலைத்தொடர்பு நிலையம் மீதான தாக்குதலில் முக்கிய போராளியாக பங்கு கொண்டாள். அந்தத் தாக்குதலில் இராணுவத்தினர் ஏவிய எறிகணை ஒன்றின் துண்டொன்று இவளைத் தாக்கியது. அந்த எறிகணைத் துண்டை தானே ஒரு பிளேட்டின் உதவியுடன் பிரித்தெடுத்தாள். இதிலிருந்து அவளின் மனவுறுதியும் சகிப்புத் தன்மையும் புரிந்து கொள்ளத்தக்கது.

மாலதி பங்கு கொண்ட இராணுவத்திற்கு எதிரான தாக்குதல்களில் யாழ்.கோட்டைப் பகுதியில் இருந்து முன்னேறிய இராணுவத்தை வழிமறித்து நடத்திய தாக்குதல் குறிப்பிடத்தக்கது. பெருமளவில் முன்னேறிய இராணுவத்தை எதிர்கொள்ள குறிப்பிட்ட பெண் போராளிகளே களமுனையில் நின்றிருந்தனர். எனினும் தனது போர் உத்தியால் இராணுவத்தை பின்வாங்கச் செய்த பெருமை மாலதியையும் சாரும்.

இவ்வாறாக இவள் பங்குகொண்ட போர்க் களங்கள் புதுப் புரட்சியாகவே அமைந்திருந்தன. 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி இவளின் இறுதிச் சமராகவும் வரலாற்றுப் பதிவாகவும் அமைந்த களமுனைப் பதிவு மிக முக்கியமானது.

கோப்பாய் பிரதேசத்தை சுற்றிவளைக்கும் நோக்குடன் புறப்பட்ட பெருமளவான இந்திய இராணுவத் தொடரணி வாகனங்களைத் தாக்கிய பெண் புலிகள் அணியில் மாலதியும் ஒருத்தியாக நின்று போராடினாள். எதிரியை மூர்க்கமாக எதிர்த்து நிலைதடுமாறச் செய்து போராடிக்கொண்டிருந்த மாலதியின் உடலை எதிரியின் குண்டொன்று துளைத்தது. இந்நிலையில், தான் கழுத்தில் கட்டியிருந்த சயனைட்டினை அருந்தி மாலதி வீரச்சாவடைந்தார். 2ஆம் லெப். மாலதியாக முதல் பெண் மாவீரராக பதிவான அந்த வீரப் புலி வேங்கையை 18 ஆண்டுகள் கடந்தும் எம்மண் விடுதலையின் சின்னமாய் பார்க்கிறது.

மாலதியின் பின்னால் ஆயிரமாயிரம் பெண்புலிகள் தரைப்புலிகளாக, கடற்புலிகளாக, கரும்புலிகளாக எனப் பல்வேறு வடிவங்களில் போராட்டத்தில் பங்கு கொண்டு வரலாறாகியுள்ளார்கள். அவர்களுக்கெல்லாம் தொடக்கவுரையாகிவிட்ட 2ஆம் லெப். மாலதி என்றுமே எம் இனத்தின் விடிவெள்ளி.

**துஷ்யந்தினி**

---

**பாரதி** கண்ட புதுமைப்பெண் தமிழீழத்துப்பெண்கள். புரட்சிகளும் எழுச்சிகளும் காலம் காலமாக இருந்து வந்தாலும் இன்றைய பெண்களுக்கு வாழ்க்கை என்பது ஒரு சவாலாக அமைந்துள்ளது. குடும்பம் என்ற புனிதமான கோவிலில் குழப்பங்கள் ஏற்பட்டு விடாமல் தாய் தந்தை கணவன் மனைவி என்ற உறவில் எந்த விரிசல்களும் ஏற்பட்டு விடாமல் விடுதலைப் பாதையை நோக்கி வாழ்க்கைப்பாதையை நகர்த்த வேண்டிய தேவை இன்றைய பெண்களிடம் உள்ளது.

பெண்களின் நிலை சமூகத்தில் முன்னரை விட ஓரளவு உயர்ந்திருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. எனினும் பெண்ணுரிமை என்பது இன்னமும் எட்டாக்கனியாகவே உள்ளது. பெண்விடுதலை எட்டப்பட வேண்டுமாயின் சமூகத்தில் ஆழமாக வேரூன்றிப்பதிந்திருக்கும் சில தவறான மரபு வழிக்கருத்துக்கள் அடியோடு ஒழிக்கப்படவேண்டும். பெண்கள் அடிமைத்தனத்தையோ அடக்கு முறையையோ விரும்பவில்லை. நாங்கள் ஒரு சுதந்திரமான பறவையாகவே வாழவிரும்புகிறார்கள். இந்த அடிமைத்தனத்தில் இருந்து விலகி விடுதலையின் சரியான பாதையை உணர்ந்த பெண்கள் இன்று விடுதலையை நோக்கி நடக்கத்தொடங்கியுள்ளார்கள். யுத்தத்தினாலும் சரி இயற்கையினாலும் சரி கணவனை இழந்து தாய் தந்தை உறவுகளை இழந்து நிறையப் பெண்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கான புகலிடங்களை கொடுப்பதற்கு பெண்கள் சார் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் முன்வந்துள்ளன. அந்த வகையில் வடக்கையும் கிழக்கையும் இணைத்து பல கிளைகளாக இயங்கி வருகின்ற பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் முதன்மை பெறுகின்றது.

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன நிர்வாகி கலைமகள் அவர்கள் இது குறித்து கருத்து தெரிவிக்கையில்:

எங்களுடைய நிறுவனத்தின் நோக்கம் சமூகத்தில் பாதிக்கப்பட்ட பெண்களை உள்வாங்கி அவர்களை சமூகபொருளாதார வளமிக்க பெண்களாக மாற்றி மீளவும் சமூகத்தில் விடவேண்டும் என்பது தான்.

பொருளாதார நெருக்கடி, கணவனை இழந்த பெண்கள் இவ்வாறான பல சம்பவங்களினால் ஆதரவற்று தாயும் பிள்ளையுமாக இருக்கின்றவர்களை இனங்கண்டு தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தி திரும்பவும் அவர்களை சமூகத்துடன் இணைத்து விட வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் தான் எங்கள் நிறுவனம் உருப்பெற்றது.

1995 ஆம் ஆண்டு முதல் ஐந்து நலம் காப்பகங்களாக விஸ்தரித்து அதில் பிறப்பிலேயே மூளை வளர்ச்சி குன்றிய பெண்களுக்கான வாழ்விடமாக நிறைமதி இல்லம், வெற்றிமனை, தாய்சேய்நலன் காப்பகம், மலர்ச்சோலை, செந்தளிர் சிறுவர் இல்லம் போன்ற இல்லங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள்.

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பெண்களின் வருகை அதிகரிக்கத்தொடங்கியது. வீதியோரங்களில் பல பெண்கள் மனநிலை பாதிக்கப்பட்டு பலரினதும் கேலிக்கும் நகைப்புக்கும் உளளாக்கப்பட்டு வீதியோரங்களில் திரிந்த பெண்களை, பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் அரவணைத்து பாதுகாத்து அவர்களுக்கென்றதொரு இல்லத்தைத்தெரிவு செய்து அந்த இல்லத்தில் அவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள். தற்போது வெற்றிமனையில் மனநிலை பாதிக்கப்பட்ட கிட்டத்தட்ட 112 பெண்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

கூடுதலாக அவர்கள் எங்களிடம் எப்படிவருகின்றார்கள் என்றால் பெற்றோர், உறவினர்களை இழந்து, கணவனை இராணுவம் பிடித்து சித்திரவதை செய்கின்ற சம்பவங்களை நேரில் பார்த்து, சொந்த இடங்கள், வீடு வாசல்களை இழந்து இனி தாங்கள் ஒன்றையுமே பெறமுடியாதென்ற நிலையில் அநாதரவாக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களாக எங்களை நாடி வந்தார்கள். இவர்களை பராமரித்து கிட்டத்தட்ட 36 பெண்கள் மீளவும் மனநிலை பாதிப்பில் இருந்து விடுபட்டு மீளவும் இயல்பு வாழ்க்கைக்கு கொண்டு சென்று சமூகத்துடன் இணைத்து விட்டிருக்கின்றோம். 16 வயதில் இருந்து 80 வயது வரையும் மனநிலை பாதிக்கப்பட்ட பெண்கள் இருக்கிறார்கள். இவர்களில் கூடுதலானவர்கள் இராணுவ கட்டுப்பாட்டுப்பகுதிகளில் இருந்து வந்தவர்கள். அதிலும் சமாதான காலத்தின் பின்பு வந்தவர்கள் தான் அதிகம். இவர்களை மனநோயில் இருந்து விடுவிப்பதற்கு மருத்துவ சிகிச்சை, புலம்பெயர் நாடுகளில் இருந்து வைத்தியர்களை வரவழைத்து அவர்களுக்கான உளவளத்துணை போன்ற சிகிச்சைகளை வழங்கி வருகின்றோம். இவர்களுக்கு நாங்கள் உறவுகளின் தொடர்புகளை ஏற்படுத்தி வருகின்றோம்.

கிராமம் கிராமமாக சென்று பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழுகின்ற பெண்களுக்கு விழிப்புணர்வு கருத்துக்களை வழங்கி வருகின்றோம். இதைவிட பிறப்பிலே மூளைவளர்ச்சி குன்றிய 42 பெண்கள் நிறைமதி இல்லத்தில் இருக்கின்றார்கள். இவர்கள் எப்படி எங்களிடம் வந்தார்கள் என்றால், கிராமத்தில் உள்ள குடும்பங்களின் வறுமை காரணமாக இவர்களை பராமரிக்க முடியாமல் இருக்கின்ற வேளை இக்கிராமமட்ட பெண்கள் அபிவிருத்திக்குழுக்களால் இனங்கண்டு அவர்களை நாங்கள் பெறுப்பேற்று பராமரித்து வருகின்றோம்.

இவர்களுக்கான கல்வி மேம்பாடுகளை செய்து வருகினறோம். தங்களுடைய பெயர் தெரியாமலும் எழுதத்தெரியாமல் இருந்தவர்களை கல்வி அறிவைப்புகுத்தி அவர்களிடத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றோம். இவர்களுக்கான புதிய வகையான கல்வி முறைகளை வெளிநாடுகளில் இருந்து பெற்றுக் கொடுப்பதற்கான வேலைதிட்டங்களை செய்து வருகின்றோம்.

இதேமாதிரியான செந்தளிர் சிறுவர் இல்லத்தில் 99 சிறுவர்களை பராமரிக்கப்பட்டு இவர்களுக்கான சகலவிதமான கல்விச் செயற்பாடுகள் வழங்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த சிறுவர்களுக்கான நிதியுதவிகளை சர்வதேச நாடுகள், அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்பு சிறுவர்கள் இங்கு வருகின்ற எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இதே போன்று மேரி இல்லம். பெற்றோர்களின் தொடர்புகள் இல்லாத 49 இளம் பெண்கள் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு எங்களுடைய பாதுகாப்பில் இருக்கிறார்கள். சமாதான காலத்தின் பின்னர் 29 பெண்பிள்ளைகள் பெற்றோர்களின் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களிடம் ஒப்படைத்துள்ளோம். நீண்ட காலமாக தொடர்புகள் இல்லாமல் கண்டி, மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு போன்ற இடங்களைச் சேர்ந்தவர்களை ஊடகங்கள் வாயிலாக தொடர்புகளை ஏற்படுத்தி அந்தப் பெற்றோர்களை தேடிச்சென்று இவர்களை ஒப்படைத்திருக்கின்றோம். ஏனைய பிள்ளைகளும் எங்களுடைய பாதுகாப்பில் இருக்கிறார்கள். அவர்களுக்கும் அவர்களுடைய பெற்றோர்களைத்தேடி தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டிருகின்றோம். இவர்களில் வயது வந்த பிள்ளைகளுக்கு நாங்கள் திருமணம் செய்து வைத்து அவர்களுக்கான வீடமைப்பு, தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்திருக்கின்றோம். இந்த மேரி இல்லத்திற்கான நிதியுதவிகளை ஜேர்மன் பெண்கள் புனர்வாழ்வு நிறுவனம் வழங்கி வருகின்றது.

இதேபோன்று தாய்சேய் நலன்களுக்காக மலர்ச்சோலை என்றதொரு இல்லம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் 68 தாய்மார்களும் குழந்தைகளும் உள்ளனர். இவர்கள் எப்படி வந்தார்கள் என்றால், இராணுவக்கெடுபிடிகள், கணவனை இழந்து பாதுகாப்பு இல்லாது உறவினர்கள் இவர்களைப்பொறுப்பேற்காமல் சமூகப்பிரச்சினைகளாலும் பாதிக்கப்பட்டு எம்மிடம் வந்துள்ளார்கள்.இவர்களை அரவணைத்துப்பாதுகாப்பதுடன் இவர்களுக்கான தொழில்பயிற்சிகளை வழங்கி தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொடுத்திருக்கின்றோம். தற்போது அவர்கள் சமூகமட்டத்தில் நல்ல தொழில்வாய்ப்பை பெற்றதுடன் நல்லதொரு வருமானத்தை சேமிக்கக்கூடிய வகையில் முன்வந்துள்ளார்கள். இதைவிட கணவனால் கைவிடப்பட்ட பெண்களை சட்டதிட்டங்களின் ஊடாக கணவனை சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களை சேர்ந்து வாழ வழிசமைத்து வருகின்றோம்.

இளவயதில் கணவனை இழந்த பெண்களுக்கு மறுமணம் செய்து வைத்திருக்கின்றோம். தற்போது இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் இருந்து சமூகப்பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட பெண்கள் எம்மிடம் வந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கான இருப்பிடங்களையும் தொழில்வாய்ப்புகளையும் நாங்கள் செய்து கொடுப்பதற்கான திட்டம் ஒன்றை கனடா சிறுவர் நிதியத்தின் நிதியுதவியுடன் இந்த வருட இறுதிப் பகுதியில் செய்வதற்கு உத்தேசித்துள்ளோம்.

அதைவிட இந்த வருடம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது அன்புமனை என்ற இல்லம். இதில் கணவன் மனைவி இடையே ஏற்படுகின்ற பிரச்சினைகளால் வருகின்ற பெண்களை மீளவும் அப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு அவர்களை நல்வழிப்படுத்தி மீண்டும் கணவனுடன் சேர்த்து விடுகின்றோம். இவ்வாறான பிரச்சினைகள் எவ்வாறு வருகின்றது என்றால்? குடும்பத்தில் ஏற்படுகின்ற வறுமை நிலை காரணமாக. இவ்வாறான குடும்பங்களை இனங்கண்டு இவர்களுக்கு தொழில்வாய்ப்புக்களை பெறுவதற்காக கடனுதவிகளை வழங்கி வசதியீனங்களை ஏறபடுத்திக்கொடுத்துள்ளோம். இதன் பிற்பாடு இவர்களின் வாழ்க்கையில் சந்தோசமான ஒரு நிலையை அவதானிக்கமுடிகிறது. இந்த அன்புமனையில் இதுவரையில் 82 தாய்மார்கள் வந்து மீண்டும் தங்கள் குடும்பங்களுடன் சேர்ந்துள்ளார்கள்.

## பாதிக்கப்பட்டோரை கைதூக்கிவிடும் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம்



**வ. பிரதீபன்**

நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு
வடக்கு~கிழக்கு மாகாணசபை
வடக்கு~கிழக்கு சமுதாய மீளமைப்புஅபிவிருத்தித் திட்டம் II(நீகோட்II)
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆ.அ.வ" கடன் இல.2168-SRI (SF)

# கேள்வி அறிவித்தல் 03

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

01 வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டத்தின்(NECORD-II) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் , கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02 இதன் பின்னகத்து தொழில் தருனராகக் குறிப்பிடப்படும் (NECORD), கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்கு தகுதிவாய்ந்த கேள்விகோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| தொடர் இலக்கம் | ஒப்பந்த இனங்காட்டல் இலக்கம் | கேள்வியின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கேள்வி பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | KN/NECORD-II/AG/02 | கிளிநொச்சி கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகம், பயிற்சி நிலையமும், விடுதியும் நிர்மாணம் | M5 | 153,000/= |

03 பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளது.

I) நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர், பதிவு தரவுப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக் கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும்.

II) இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக (ICTAD உடன் M7 இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இதற்கு வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் /அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத் திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்படவேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.

IV) இக்டாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்ப வர் போதிய கேள்வி கோரும் ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V) மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI) கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத்த கத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்கவேண்டும்.

04 மேற்படி பந்தி 2இல் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கு கேள்வி கோரலாம். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பான கேள்வியாக அமையவேண்டும். ஏதேனும் ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை நிகொட் திட்டத்தின் கீழ் நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும்.

05 ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிகத் தகவல்களை கேள்விப்படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன் கேள்வி ஆவணங்களை வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் (நிகொட்), மாவட்ட செயலகம், கிளிநொச்சி என்ற விலாசத்திலுள்ள மாவட்ட பிரதித்திட்டப்பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல: 021 228 5734, தொலைநகல்:- 021 228 5735, மின்னஞ்சல்:- knnecord @ sltnet.lk

06 கேள்வி ஆவணங்களை 12.10.2005 ஆம் திகதியிலிருந்து 24.10.2005 ஆம் திகதிவரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 1000/=த்தை (கேள்வி ஆவணம் ஒன்றுக்கு) செலுத்திக் கொள்வனவு செய்து கொள்ளலாம்.

07 கேள்வி கோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு I வாசகம் II குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணங்களை இது தொடர்பாக பந்தி 8இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்படவேண்டும்.

08 அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் உரிய பிணைப்பணத்துடன் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, நிகொட் கருத்திட்டம், கச்சேரி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு 31.10.2005 ஆம் திகதி பி.ப 1.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும் கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09 ஒப்பந்தக்காரர்களுக்கு கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று 24.10.2005 ஆம் திகதி அன்று முற்பகல் 10.30 மணிக்கு கச்சேரியில் நடைபெறும்.

10 கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாக விளங்க மாட்டார்.

தி.இராசநாயகம்,
தலைவர், மாவட்ட கேள்விச் சபை,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-13011)

---

G.C.E. A/L பரீட்சையில்
சித்தியடைந்து பல்கலைக்கழகம்
புக முடியாதவர்களுக்கு ஓர் அரிய
சந்தர்ப்பம்

City&Guilds International London (UK)
நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற.

- Telecommunication Systems
- Electrical & Electronic Engineering

ஆகிய துறையில் பொறியியல் வகுப்புகள்
கொழும்பில உள்ள APPS International Net Work (PvT) LTD ஆல் நடாத்தப்படுகின்றது.
புதிய பிரிவுகள் ஆரம்பம் 16.10.2005

Note:- Advaece Diploma தராதரத்துடன் Charted Engineer, Gradaate Diploma நேரடியாகப் பயிலலாம். அத்தோடு London பல்கலைக்கழகங்களில் 2ஆம் வருட அனுமதிகள் பெற்றுக்கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
இல. 07,பலாலிவீதி,யாழ்ப்பாணம்.
Regd no-15251 T.P.021-2223335.
(சி-13021)

---

# மத்திய கிழக்கு நாடுகளில் உடனடி வேலைவாய்ப்பு

குவைத், துபாய்,சவுதி அரேபியா ஆகிய நாடுகளில் பின்வரும் தொழில் வாய்ப்பு

| | |
|---|---|
| பாதுகாப்பு உத்தியோகத்தர் | (SECURITY GUARD) |
| விமான நிலைய பொதி சுமப்பவர் | (PORTER) |
| விமான நிலைய சுத்திகரிப்பு | (CLEANING WORK) |
| கட்டட தொழிலாளர்கள் | (LABOURER) |
| ஷட்டரிங் வேலை அனுபவம் கொண்டதச்சுத் தொழிலாளர்கள் | (SHUTTERING CAR PENTER) |
| மேசன்மார் | (MASON) |
| மாபிள் கல் பதிக்கும் அனுபவம் வாய்ந்த மேசன்மார் | (MARBLE/TILES MASON) |
| மின் இணைப்பாளர்கள் | (ELECTRICIAN) |
| உருக்குப் பொருத்துநர்கள் | (STEEL FIXER) |
| பிளம்பர்மார் | (PLUMBERS) |
| சுவர்வர்ணம் தீட்டுவோர். | (WALL PAINTER) |

(சி. 13015)

தொடர்புகளுக்கு
RAIN BOW TRAVELS & TOURS
321/2 கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
ராஜா கிறீம் கவுசுக்கு அருகாமையில் Tel: 0777,328219–0212223237

---

# MEDICINE IN RUSSIA

SMOLENSK STATE MEDICAL ACADEMY
DOCTOR OF MEDICINE (MD)
MAIN SUBJECTS IN ENGLISH
*Internationally Recognized, Including British.*
*Srilanka Medical Council and W.H.O*
*2000 US $ Per annum (6 Years)*

குறைந்த கட்டணத்தில் கற்பதற்கும், A/L பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோருக்கும் அரிய சந்தர்ப்பம்

Admission, மற்றும் மேலதிக தகவல்களை
சிரேஷ்ட மருத்துவ மாணவர்கள் மூலம் நேரடியாகப்பெற்றுக்கொள்ளலாம்.

T. THULASY 0785263960
SMOLENSK FRIENDSHIP MEDICAL ASSOCIATE

NO.33, Rudra Mawatha,
Wellawtta

672 K.K.S ROAD
Nachchimarkovillady
Jaffna 021-2222536.

## தமிழ் மாணவர்கட்கு சிறந்த வாய்ப்பு

குறிப்பிட்ட அளவு மாணவர்களுக்கே அனுமதி

(சி.12898)

# IMMEDIATE VACANCY

## Solidar

AN INGO consortium induding NPA,SAH and ASB

Solidar is a consortium of organizations of 12 Europeam countries that supports a broad portfolio of projects. The Solidar network in Sri lanka comprises of three international NGO s- Arbeiter Samariter Bund (ASB), Norwegian People's Aid (NPA) and swiss Labour Assistance (SAH).

We are currently at the planning stage for the phase 3 Tsunami Shelter constuction project and the following vacancies are to be filled in immediately. All positions are based in kilinochchi | Paranthan.

Interested candidates MUST posses the minimum requirements stated below. please send in your applications to reach us on or before 11th October 2005.

**position:Head of Administration**
At least 2years of experience in a similar role which should include the following: Staff management and office organization, management of relevant database systems.Good command of written and spoken English would be essential. Working Knowledge on Word, Excel, PowerPoint and access is a requirement.

**position: administrative Officer**
Provide administrative support to the Head of Administration. Duties will include maintenance of filing system, preparation of travel passes, arranging accommodation for guests, photocopying and other administrative tasks. Preference will be given to those with experience in a similar field.

**position: Accountant**
Excellent knowledge in maintaining company accounts with at least 3-5 years experience. Must be able to work in MS Excel and MS Access. Fluency in written and spoken English is a must.

**position: Translators (2 positions)**
Should be capable of both verbal and written translations from Tamil to English and vis versa. Ability to translate Sinhalese into English will be an added qualification.

**position: Telephone Operator cum receptionist**
Experience in handling a PABX system would be an advantage though not essential.Good command of spoken English is a must

(சி-13007)

Norwegian People's Aid | ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. | Swiss Labour Assistance SAH

# ஜெனரல் இன்ஜினியறிங் கொம்பனி

*(துறைசார் ஆலோசனை· வழங்குநர், நிர்மாணதாரர்)*

## பணிநிலை வேண்டுகை

கீழ்க்குறிப்பிடப்படும் பணிநிலைகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

1.கணக்காளர்

தகைமை :- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் முகாமைத்துவ மட்டத்திலான கற்கை நெறி ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

நிறுவனம் ஒன்றில் கணக்காளராகப் பணியாற்றிய ஐந்து வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

2.கணக்குப் பதிவாளர்

தகைமை :- க.பொ. த(உ/த) வர்த்தகப்பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

நிறுவனம் ஒன்றில் கணக்குப் பதிவாளராக பணியாற்றிய மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

3.காசாளர் :-

தகைமை க.பொ. த(உ/த)த்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் நிறுவன மொன்றில் காசாளர் பணியில் 3 வருடத்திற்கு குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

4.கணினித்தரவுப்பதிவாளர்

தகைமை :- க.பொ.த(சா/த) த்தில் சித்தியடைந்திருப்பதுடன் (Ms.Office ) கற்கைநெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அத்துடன் நிறுவனமொன்றில் கணினித்தரவுப் பதிவாளர் பணிநிலையில் 01 வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

மேற்குறித்த பணிநிலைகளுக்குத் தகுதியானவர்கள் தமது தகைமைச் சான்றிதழ் களுடன் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் :- *ஜெனரல் இன்ஜினியறிங் கொம்பனி, 45A கனகபுரம் – கிளிநொச்சி,*

காலம :- *12.10.2005 (புதன்)*

நேரம் :- *காலை 9 மணி தொடக்கம் 12.00 மணிவரை*

**பணிப்பாளர்,**
**ஜெனரல் இன்ஜினியறிங் கொம்பனி,**
**45 A கனகபுரம்-கிளிநொச்சி.**

(சி.13051)

# பிரதமர் பதவி தனக்கே என உறுதிப்படுத்தி மகிந்தவிடம் கடிதம் கேட்கிறார் அனுரா

சிறிலங்கா சனாதிபதியாக மகிந்த ராஜபக்ச பதவியேற்ற பின் பிரதமர் பதவியும் வெளிவிவகார அமைச்சுப் பொறுப்புக்கும் தன்னையே அறிவிக்க வேண்டும் என்பதை எழுத்துபூர்வமாக தருமாறு மகிந்தவிடம் சிறிலங்கா வெளிவிகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த ஒரு மாதகாலமாக வெளிநாட்டுப்பயணங்களை மேற்கொண்டு தற்போது சிங்கப்பூரில் ஓய்வெடுத்து வரும் அனுரா, தனது நெருங்கிய நண்பர் ஒருவர் மூலமாக மகிந்தவிடம் இந்த உறுதிமொழிக்கடிதத்தை கேட்டுள்ளார். அனுராவின் நண்பர் இந்த விடயத்தைஅமைச்சர் மங்கள சமரவீரவிடம் தெரிவித்துள்ளார். மகிந்த ராஜபக்ஷவும் இது தொடர்பில் அனுரா பண்டாரநாயக்கவுக்கு பதிலளிக்க விரும்பவில்லை என்று சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. வேட்பு மனுத்தாக்கலின்போது சுதந்திரக்கட்சித் தலைவர் சந்திரிகா குமாரதுங்க அவரது சகோதரரும் வெளிவிவகார அமைச்சருமான அனுரா பண்டாரநாயக்க உள்ளிட்டோர் இல்லை என்பதால் சந்திரிகாவின் சகோதரி சுனித்திராவை மகிந்த ராஜபக்ஷ அழைத்துள்ளார்.

ஆனால் அரசியல் நிகழ்வுகளில்தான் பங்கேற்றபதில்லை என்று சந்திரிகாவின் சகோதரி நிராகரித்துவிட்டார். சந்திரிகா மீதும் அவரது சகோதரர் மீதும் கடும் அதிருப்தியில் உள்ள மகிந்த, அனுராவிற்கு உறுதிமொழிக் கடிதம் தர இயலாது என்று மறைமுகமாக கூறியிருப்பதாகவும் தெரிகின்றது.

03-10-2005 முதல் 01-11-2005 வரை

SALE SALE SALE SALE

தீபாவளி மலிவு விற்பனை
நீங்கள் வாங்கும் சகல பொருள்களுக்கும்
விசேட கழிவு
உடனே விஜயஞ்செய்யுங்கள்:

## லைடன் புடைவை நிலையம்

இல. 410, ஆஸ்பத்திரி வீதி
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.
☎ 222 2381

(சி-13019)

**கற்றல் கற்பித்தல் தர உள்ளீட்டு மூலவள நிலையம் நடத்தும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் சாதன உருவாக்கல் போட்டிப் பரிசளிப்பு விழா–2005**

இடம் :–யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
காலம் :–10.10.2005 திங்கட்கிழமை
நேரம் :–மாலை 3 மணி
தலைவர்:–கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
(பீடாதிபதி,யாழ்ப்பாணம்தேசியகல்வியியற் கல்லூரி)
பிரதம விருந்தினர் :– திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
(அதிபர்,கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)
சிறப்பு விருந்தினர் :– திரு.K. சிவராமலிங்கம்
(முகாமையாளர்,இலங்கை வங்கி ,2 ஆம் கிளை,யாழ்ப்பாணம்)
திருமதி. ஆனந்தி சிவஞானசுந்தரம்
(அதிபர்,யா/இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்)

நிகழ்ச்சி நிரல்

*மங்கல விளக்கேற்றல்
*இறைவணக்கம்
*வரவேற்புரை : செல்வி. ஜே.றொக்சினி (முகிழ்நிலை ஆசிரியா)
*வாழ்த்துரை : திரு. எஸ்.கே. யோகநாதன்
மேலதிக பீடாதிபதி,யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.
*தலைமையுரை :கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
(பீடாதிபதி,யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி)
*நோக்கவுரை :திரு. த. சிவகுமார்
(கல்வியியலாளர்,யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி)
*சிறப்பு விருந்தினர் உரை,
*பிரதம விருந்தினர் உரை
*படி – ஆசிரியர் வாண்மை இதழ் வெளியீடு
*வெளியீட்டுரை திரு.பா.தனபாலன்,உபபீடாதிபதி கல்வியும் தரமேம்பாடும்.
*பரிசளிப்பு
*நன்றியுரை: செல்வன் யோ. துஸ்யந்தன் (முகிழ் நிலை ஆசிரியர்)
*கல்லூரிக் கீதம் –

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
யாழ்ப்பாணம்,தேசியக்கல்வியியற் கல்லூரி,கோப்பாய்.

(சி-13020)

விளம்பர அனுசரணை
ஹரன் புடைவையகம், திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி தொ.பே.0212222697

# கண்ணீர் அஞ்சலி



இரவிக்குமார்
மோகனப்பிரியன் (தர்ஷன்)

**அன்னை மடியில் 2001.06.26**
**ஆண்டவன் அடியில் 2005.10.06**

எமது நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் கானகன் முன்பள்ளி மாணவனும், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தலைவியுமான திருமதி சசிகலா இரவிக்குமார் அவர்களின் மகனுமான இரவிக்குமார் மோகனப்பிரியன் (தர்ஷன்). அவர் சாவடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தார்க்கும் எமது அனுதாபத்தை தெரி விப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையபிரார்த்திக்கின்றோம்.

*தகவல்:–*
*முன்பள்ளி ஆசிரியர்கள், நிறுவன நிர்வாகத்தினர், இணைப்பாளர், பணியாளர்கள், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், உருத்திரபுரம்.*

(6828)

## மரதன் ஓட்டப் போட்டியில் எட்டு வயதுச் சிறுவன் சாதனை




உடையார்கட்டு சுதந்திரபுரத்தை சேர்ந்த எட்டு வயதுச் சிறுவன் 21 கிலோ மீற்றர் தூரத்தை ஓடிமுடித்து சாதித்துள்ளான்.

சுதந்திரபுரம் நிரோஜன் விளையாட்டுக்கழகம் நேற்று நடாத்திய 21 கிலோ மீற்றர் மரதன் ஓட்டப் போட்டியையே அவர் ஓடி முடித்துள்ளான். அத்துடன் தொடர்ச்சியாக நான்கு கிலோ மீற்றர் தூரத்தையும் அவன் ஓடி முடித்து சாதித்துள்ளான்.

## லெப். கேணல் நிரோஜன் ஞாபகார்த்த மரதன் ஓட்டப் போட்டி முடிவுகள்





உடையார்கட்டு சுதந்திரபுரம் லெப். கேணல் நிரோஜன் ஞாபகார்த்தமாக நிரோஜன் விளையாட்டுக்கழகம் நடாத்தும் விளையாட்டுப்போட்டிகளில் நேற்று ஆண், பெண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி இடம் பெற்றது.

இரண்டு கிலோ மீற்றர் ஓட்டப்போட்டியில் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை சு.சுரேந்திரகுமாரும் இரண்டாமிடத்தை கி.திலீ பனும் மூன்றாமிடத்தை வ.சத்தியநாதனும் பெற்றுக் கொண்டனர்.

பெண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை சி.ராதிகாவும், இரண்டாம் மூன்றாமிடங்களை பொ.சாந்தி பொ.சாளினி ஆகியோரும் பெற்றுக்கொண்டனர். இவர்கள் சகோதரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

முள்ளிவாய்க்கால் சந்தியில் இருந்து சுதந்திரபுரம் சந்திவரை நடைபெற்ற 21கிலோ மீற்றர் மரதன் ஓட்டப் போட்டியில் முதலாமிடத்தை முள்ளிவாய்க்காலைச்சேர்ந்த க.மயூரனும் இரண்டாம் இடத்தை உடையார்கட்டைச்சேர்ந்த ச.சந்திரகுமாரும் மூன்றாமிடத்தை வள்ளிபுனத்தை சேர்ந்த இ.ஜெகனும் பெற்றுக்கொண்டனர்.

## அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மேற்கிந்தியத்தீவு அணி அறிவிப்பு



அவுஸ்திரேலியாவுடனான போட்டிகளில் பங்கேற்கும் மேற்கிந்தியத்தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சிறிலங்காவுக்கு வருகைதர மறுத்த லாரா, கிறிஸ் கெய்ல் .சர்வான் ஆகியோர் இவ்வணியில் பங்கேற்கின்றனர். அத்துடன் பந்து வீச்சில் சந்தேகம் காரணமாக சர்வதேச கிரிக்கெட் சபையால் தடை. விதிக்கப்பட்ட வேகப்பந்து வீச்சாளர் ஜெர் மெய்ன் லோசன் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

அணிவிபரம்:- சந்தர்போல் (அணித்தலைவர்) கெய்ஸ்டெவன்ஸ்மித் ,சர்வான், லாரா. ஹின்ட்ஸ் ,சாமுவெல்ஸ், லெய்ன் ஸ்மிஸ், பிராவோ, ராம்டின் (வி.கா) எட்வர்ட்ஸ்,கொலிமோ. பெஸ்ட், லோசன், பவல் ஆகியோர்.

## விசுவமடு வர்த்தக சங்கம் நடாத்தும் மென்பந்து போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம்




விசுவமடு வர்த்தக சங்கம் நடாத்தும் கழகங்களுக்கிடையிலான மாபெரும் மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் நேற்று மூன்று போட்டிகள் நடைபெற்றன. விசுவமடு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும் இப்போட்டிகளில் நேற்றைய முதலாவது போட்டியில் வித்தியா ஏ - ஸ்கந்தா அணிகள் மோதின. இதில் வித்தியா ஏ அணி ஒன்பது விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இரண்டாவது போட்டியில் சூப்பர் ஸ்டார் அணியை எதிர்த்தாடிய இளந்தாரகை பி அணி பத்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. மூன்றாவதாக நடைபெற்ற முத்தமிழ் - தோழர்கள் அணிகளுக்கிடையிலான போட்டியில் தோழர்கள் அணி ஒன்பது விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

லீக் முறையில் நடைபெற்றுவரும் மேற்படி போட்டிகளில் தர்மபுரம் இளந்தாரகை பி அணியும், முள்ளியவளை வித்தியா ஏ அணியும் அதிக புள்ளிகளைப் பெற்று காலிறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

இதேவேளை, நேற்று முன்தினம் நடைபெற்ற தூயதமிழ் - பாரதி ஏ அணிகளுக்கிடையிலான போட்டியில் தூயதமிழ் அணி வெற்றி பெற்றது என்பதற்குப் பதிலாக பாரதி ஏ அணி என இடம்பெற்றிருக்க வேண்டும். தவறுக்கு வருந்துகின்றோம். மேற்படி போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக குமார், சுபானந்த் ஆகியோர் கடமையாற்றினர்.

## 2006 உலகக் கிண்ண கால்பந்து போட்டி தகுதி பெற்றது இங்கிலாந்து அணி



அடுத்த ஆண்டு ஜேர்மனியில் நடைபெறவுள்ள உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிக்கு இங்கிலாந்து அணி தகுதிபெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை ஒவல்ட்ரப்போட் மைதானத்தில் ஒல்லாந்து அணியுடனான தகுதிகாண் போட்டியில் ஒன்றுக்குப் பூச்சியம் என்ற ரீதியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்று தகுதிபெற்றது. அந்த ஒரு கோலையும் தண்டஉதை மூலம் அணியின் பிராங்லம்பேட் பெற்றுக் கொடுத்தார். இங்கிலாந்து மேலும் ஒரு போட்டியில் போலந்து அணியை வரும் புதனன்று சந்திக்கும். அதில் வெற்றி பெற்றாலும் தோல்வியடைந்தாலும் இங்கிலாந்து தகுதிபெற்றுவிடும். அதேவேளை பராகுவே அணியும் வெற்றிபெற்று . உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு தகுதிபெற்றுள்ளது.

## கால்பந்து விளையாட்டுக்கு புதிய தொழில் நுட்பம் தேவையில்லை




கால்பந்து விளையாட்டில் காதில் கடுக்கன், பந்தில் கம்யூட்டர் சிப், செயற்கையான மைதானம் போன்ற புதிய தொழில்நுட்பங்கள் தேவையில்லை என்கிறார் ரொனால்டோ.

களத்தில் இருக்கும் வீரருக்கும் பயிற்சியாளருக்கும் தொடர்பு ஏற்படுத்த கடுக்கன் முறை அறிமுகமானது, அதாவது வீரர் தனது காதில் எலக்ரோனிக் கடுக்கனை அணிந்து கொள்வார். இதன் மூலம் இவரை பயிற்சியாளர் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முடியும். இந்த முறைக்கு பிரேசில் நாட்டில் அதிக வரவேற்பு இல்லை. இது பற்றி அந்த அணியின் நட்சத்திர வீரரான ரொனால்டோ கூறுகையில்;

காதில் ஏதாவது ஒன்றை அணிந்து விளையாடுவது மிகவும் கொடுமையானது. இதனால் பயன் எதுவும் ஏற்படப் போவதில்லை. பயிற்சியின் போது சொல்லிக் கொடுத்ததை பின்பற்றினாலே போதும். வீரரின் திறமையை பொறுத்துத் தான் முடிவு அமையும். பயிற்சியாளர் தொலைபேசி மூலம் தரும் ஆலோசனை எல்லாம் பலன் தராது.

'பிபா' அறிமுகப்படுத்திய கம்யூட்டர் சிப் அடங்கிய பந்து, (சிப் இருப்பதால் பந்து கோல் எல்லையைத் தாண்டியதா என்பதை தெளிவாக அறிய முடியும்) செயற்கை இழையிலான மைதானங்களில் அதும் ஆர்வம் இல்லை. இதைக் காட்டிலும் எளிதான முறை உண்டு அது நடுவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதுதான். இருவர் விளையாடும் போட்டிகளில் கூட நிறைய நடுவர்கள் இருக்கிறார்கள். ஆனால் கால்பந்தில் இரண்டு பக்க நடுவர் ஒரு பிரதான நடுவர் மட்டுமே உள்ளனர் இவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தால் சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம். செயற்கை இழையிலான மைதானங்களில் பயிற்சி செய்து இருக்கிறேன்" ஆனாலும் புல் தரையில் விளையாடுவது தான் எனக்கு மிகவும் பிடிக்கும் இவ்வாறு ரொனல்டோ கூறினார்.

## உலக அணிக்கு மீண்டும் தோல்வி கணக்குத் தீர்த்தது அவுஸ்திரேலியா



சுப்பர் சீரிஸ் தொடரில் கடைசி ஒருநாள் போட்டியிலும் உலக அணி பரிதாபமாக தோற்றுப்போனது.

மெல்பேர்னில் நேற்று மூன்றாவதும் இறுதியுமான போட்டியில் வெற்றிபெற்று மானம் காக்க வேண்டியகட்டாயத்தில் உலக அணியும் இன்னொரு வெற்றிக்குதயாரான நிலையில் அவுஸ். அணியும் களத்தில் குதித்தன.

வழமை போன்று மூன்றாவது போட்டியிலும் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ். அணித்தலைவர் பொண்டிங் துடுப்பாட்டத்தை தேர்ந்தெடுத்தார்.

அவ்அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 293ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் கில்கிறிஸ்ட் 32, பொண்டிங் 68, மார்ட்டின் 33 ஓட்டங்களையும், ஆட்டமிழக்காது குசே 75, வட்சன் 66 ஓட்டங்களைஅதிகபட்சமாகப் பெற்றனர்.



பந்து வீச்சில் முரளிதரன் இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினார். 294 ஓட்ட வெற்றி இலக்கு நோக்கி ஆட்டத்தை ஆரம்பித்த உலக அணி ஆரம்பம் முதலே நெருக்கடியைச்சந்தித்ததுடன் கத்துக்குட்டி அணிபோல் 27.5 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்று 156 ஓட்டங்களால் படுதோல்வி அடைந்தது உலக அணி.

துடுப்பாட்டத்தில் சேவாக் மாத்திரம் 37 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றார்.பந்து வீச்சால் பிரட்லீ, வட்சன் தலா நான்கு விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக வட்சன் தெரிவானார். போட்டியின் தொடர் நாயகனாக கில்கிறிஸ்ட் தெரிவானர்.


இத்தொடர் வெற்றி மூலம் அவுஸ் திரேலியா தன் மீது இடையில் ஏற்பட்ட விமர்சனங் களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தது.

விளையாட்டு









## சிந்தனைக்கு

விடுதலைப்புலிகள் மக்களிலிருந்து வேறுபட்டவர்கள் அல்ல; விடுதலைப் புலிகள் ஒரு மக்கள் இயக்கம் புலிகள் தான் மக்கள்;மக்கள் தான் புலிகள்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 10.10 .2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
natham23 ela@ yahoo.com

## வன்முறை மட்டுமல்ல....!

"அரசியல் வன்முறைகள் சமாதான முன்னெடுப்புக்களுக்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும்" என்ற நோர்வே தூதுவரின் அபிப்பிராயம் பொதுப்படையாக ஏற்புடையதொன்றே. ஆனால் இது மட்டும் தான் சமாதான முயற்சிகளில் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதல்ல. சரியானவழியில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படாமையும் சமாதான முன்னெடுப்புக்களில் பாதிப்பை விளைவிக்கத்தக்கவையே.

அரசியல்வன்முறைகள் என்பதற்கு நோர்வேயின் தூதுவர் எத்தகைய அர்த்தம் கொண்டுள்ளாரோ எமக்குத் தெரியாது. ஆனால் சிலர் வியாக்கியானம் செய்வதுபோல் சிறிலங்கா அரசியல்வாதிகள் தாக்கப்படுவதும், சனநாயக நீரோட்டத்திற்குத் திரும்பிவிட்டதாகக் கூறிக்கொண்டு சிறிலங்கா இராணுவத்தின் துணைப்படையாகச் செயற்படும் தமிழ் இனவிரோதக்குழுக்கள் மீது நடாத்தப்படும் தாக்குதல்களையும் மட்டும் சிலவேளைகளில் நோர்வே தூதுவர் அரசியல் வன்முறையெனக் கூறிக்கொண்டாரோ தெரியவில்லை.

ஆனால் இதற்கும் அப்பால் நோர்வேயின் தூதுவர் ஆயுதங்கள் அற்றவர்களாக அரசியற் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்களும் அரசியல் வன்முறைகளென எடுத்துக்கொண்டால் அது வரவேற்கத்தக்க தொன்றே. ஆனால் இவ்விடயத்தில், நோர்வேயின் தற்போதைய நிலை எமக்குப் புரியப்பட்டதொன்றாக இல்லை.

அவ்வாறு இல்லாது சிறிலங்கா அரசியல்வாதிகள் மீது நடாத்தப்படும் தாக்குதல்கள் மட்டுமே அரசியல் வன்முறைகளென எடுத்துக்கொண்டால் அது நியாயபூர்வமானதாகவும் நடு நடுநிலை யுடன் கூடியதானதாகவும் இருக்கமாட்டாது. ஏனெனில் விடுதலைப்புலிகள் இயக்கத்திடம் ஆயுதங்கள் உள்ளன என்பது உண்மையே. ஆனால் அதற்காக விடுதலைப்புலிகள் இராணுவக்கட்டுப்பாட்டு பகுதிக்குள் ஆயுதங்களுடன் செல்வதுமில்லை. நடமாடுவதுமில்லை. ஆகையால் விடுதலைப்புலிகள் மீதான வன்முறைகளை அரசியல் வன்முறைக்கு உட்பட்டதாகவே கொள்ளப்படுதல் வேண்டும்.

அவ்வாறு இல்லாதுவிடின் சிறிலங்கா இராணுவப் பாதுகாப்புடனும் சுயபாதுகாப்புடனும் வலம்வரும் அரசியல் வாதிகளை மட்டும் எவ்வாறு அரசியல்வாதிகளாக ஏற்றுக்கொள்ளமுடியும். இவர்களின் பாதுகாப்பிற்கென ஆயுதம் தாங்கிய பாதுகாப்புப் படையினர் இல்லையா? அவர்களின் மெய்ப்பாதுகாவலர்கள் தான் இல்லையா? இவர்கள் ஆயுதம் தான் தாங்கியிருக்கவில்லையா? ஆதலால் அரசியல் வன்முறை என்ற ரீதியில் விடுதலைப்புலிகள்மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

இது ஒருபுறமிருக்க யுத்தநிறுத்தம் மூன்றரை ஆண்டுகளைக் கடந்துவிட்டநிலையில் சமாதான முயற்சிகள் சீரான முறையில் முன்னெடுக்கப்படுகின்றதா? என்ற கேள்வி தவிர்க்கமுடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் சமாதானப் பேச்சுவார்த்தை இடம்பெற்று சுமார் இரண்டு ஆண்டுகளை எட்டியுள்ள நிலையிலும் யுத்த நிறுத்த உடன்பாட்டில் இணக்கம் கண்டுள்ள பல விடயங்களும்கூடத் தற்பொழுது நெருக்கடிக்குள்ளாகியுள்ள இந் நிலையிலும் இனப்பிரச்சினைத் தீர்வில் இவை சமாதான முன்னெடுப்புக்களில் தாக்கங்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன.

அதாவது சமாதான முயற்சிகளுக்கு அடிப்படையாக உருவாக்கப்பட்ட யுத்தநிறுத்த உடன்பாட்டு விதிகள் பல இதுவரையில் சிறிலங்கா அரசாங்கத்தால் அமுல் செய்யப்படவில்லை. குறிப்பாக பொதுமக்களின் வாழ்விடங்கள், வழிபாட்டுத்தலங்கள், விளைநிலங்கள் என்பனவற்றில் இருந்து முற்றாக இராணுவம் விலகவில்லை. மாறாக உயர்பாதுகாப்பு வலயம் என்ற ரீதியில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையே ஆயுதப் படைத்தரப்பு மேற்கொண்டுள்ளது.

இது ஒருபுறமிருக்க துணை இராணுவப் பிரிவுகளாகச் செயற்படும் தமிழ் விரோதக் குழுக்களின் ஆயுதங்கள் யுத்தநிறுத்த உடன்பாட்டு அடிப்படையில் களையப்படவில்லை. மாறாகப் புதிய படைப்பிரிவுகளை உருவாக்குவதிலேயே சிறிலங்கா அரச தரப்பு ஈடுபட்டுள்ளது.

உடன்பாடு கைச்சாத்தாகி, மூன்றரை ஆண்டுகள் அடைந்துவிட்ட நிலையிலும் இவை அமுல்படுத்தப்படாதவையாக ஒருபுறமிருக்கையில், அமுலாக்கல் விதிக்கு கொண்டுவரப்பட்ட விடயங்கள் சிலவும் தற்பொழுது கைவிடப்பட்டவையாகிவிட்டன. குறிப்பாக யுத்தநிறுத்த உடன்பாட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு விடுதலைப்புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் மேற்கொண்டுவந்த அரசியல் பணிகளை இடைநிறுத்திவிட்டு வெளியேறியுள்ளனர். இதற்கு நிராயுதபாணிகளாக அரசியல்பணியில் ஈடுபட்டு வந்த விடுதலைப் புலிகள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்களே காரணமாகும்.

இந்நிலையானது விடுதலைப்புலிகளின் அரசியல் செயற்பாட்டை முற்றாக முடக்கத்திற்கு உள்ளாக்கியுள்ளது. இவையும் சமாதானத்திற்கான முன்னெடுப்புக்களுக்கு இடையூறுகள் விளைவிக் கத்தக்கவையேஆகும். இந்தவகையில் அரசியல்வன்முறைகள் மட்டுமல்ல சமாதான முன்னெடுப்பிற்கான வழி முறைகளும்,அவை தொடர்பான உடன்பாடுகளும் சீராக அமுல் செய்யப்படாமையும் சமாதானத்தை சீரழித்து விடத்தக்கவையாகும்.

# புலிகளுக்கு எதிரான அரசியல் சதியே ஆக்கிரமிப்பு பகுதியில் தொடரும் வன்முறைகள்

### -கண்காணிப்புக் குழுவிடம் அரசியல்துறைப்பொறுப்பாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் தொடரும் வன்முறைகள் அனைத்தும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான அரசியல் சதியே என்று அவர்கள் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு .ப. தமிழ்ச் செல்வன் கூறியுள்ளார்.

போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு சு.ப. தமிழ்ச்செல்வன் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பு பகுதிகளில் அதிகரித்து வரும் வன்முறைகள் மற்றும் ஆட்கொலை களால் தமிழ்மக்கள் மிகவும் அதிர்ச்சியும் குழப்பமும் அடைந்துள்ளார்கள்.

அதிகரித்து வரும் இந்தப்படுகொலைகள் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது அவமதிப்பை உருவாக்கும் வகையில் நடத்தப்பட்டு வருகிறன.

இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளிலிருந்து எமது அரசியல்துறைப்போராளிகள் பாதுகாப்புக் காரணங் களுக்காக வெளியேறிய பின்னர் இதுபோன்ற வன்முறைகள் அடிக்கடி நிகழ்வதை சுட்டிக்காட்டு கிறோம்.

இந்த வன்முறைகளுக்குப் பின்னால் அரசியல் சதி இருக்கிறது. தமிழீழ விடுதலைப்புலிகள் மீது குற்றம் சாட்டுவதற்காகவே இந்த வன்முறைகள் நடாத்தப் படுகின்றன.

அப்பாவி மக்களைப் படுகொலை செய்துவிட்டு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரானவர்கள் என்பதால் விடுதலைப்புலிகள் படுகொலை செய்துள்ளார்கள் என்று கூறப்பட்டுவருகிறது.

நுட்பமாகத் திட்டமிட்டு தமிழீழ விடுதலைப்புலிகள் மீது பழியைச் சுமத்தும் அரசியல் நோக்கங்கள் இந்த வன்முறைச் சம்பவங்களுக்குப் பின்னால் உள்ளன என்பதில் எங்களுக்கு சந்தேகங்கள் எதுவுமில்லை.

இந்த வன்முறைகள் தொடர்பாக முறையான விசாரணைகள் ஏதுமின்றி, பயன்தரக்கூடிய குற்றத்தடுப்பு முறைகளையும் நடைமுறைப்படுத்தாமல், ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பான யுத்த நிறுத்த ஒப்பந்த விதிமுறைகளையும் நடைமுறைப் படுத்தாமல் அரசும் அதன் இராணுவப்பேச்சாளரும் புலிகள் மீது சேறு வாரிப்பூசும் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக் கின்றனர்.

யுத்த நிறுத்தத்தை பற்றுறுதியோடு ஏற்றுக் கொண்ட தரப்பு என்ற முறையில் இந்தக் குற்றச்சாட்டுக்களை நாம் அடியோடு நிராகரிக்கின்றோம்.யுத்த நிறுத்த உடன்பாட்டின் 1.8 பிரிவு குறித்தும் அந்தப்பிரிவை மீறும் வகையில் தமது அரசியல் தலைவர்களுக்காக இத்தகைய இழி செயல்களைப் புரியும் சிறிலங்கா இராணுவம் மற்றும் அவற்றின் துணைப்படைகள் குறித்தும் தங்களுக்கு உள்ள வரையறைகளுக்குக்குள் அர்த்தமுள்ள வகையில் தலையீடு செய்யுமாறு கண்காணிப்புக் குழுவை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

வன்செயல்களும் கொலைகளும் ஆபத்தான எல்லைக்கட்டத்தை அடைந்துள்ள, முக்கியமாக இந்த யுத்த நிறுத்த காலத்தில் குறிப்பாக அமைதியிலும், அமைதியான சிறிலங்கா சனாதிபதித் தேர்தலிலும் அக்கறையுள்ள அனைவரினதும் கவலைக்குரிய விடயமாக இது உள்ளது.

வன்செயல்களைத்தடுப்பதற்கு எங்களின் முழு ஒத்துழைப்பையும் தங்களுக்குத் தருவோம் என்று உறுதி யளிக்கிறோம்.

என்றாலும் சிறிலங்கா இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள சிறிலங்கா அரசின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் எனத் திட்டவட்டமாக வரையறை செய்யப்பட்டுள்ள பகுதிகளிலேயே இந்தப் படுகொலை களும் வன்முறைகளும் நடைபெறுவதால் எங்களின் சட்டமும் ஒழுங்கு முறையும் அங்கு செயற்படுவதில்லை.

இந்த விடயத்தில் எங்களின் பங்கு மிக மிக மட்டுப்படுத்தப்பட்டதே என்பதையும் கவலையுடன் தங்களுக்குத் தெரிவிக்கின்றோம்.

எனவே, இந்த மோசமான சூழ்நிலையைக் கவனத்தில் எடுத்து இந்தத்தொடர் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு அப்பாவிகளின் உயிரைக்காப்பற்றவும் யுத்த நிறுத்தத்தைப்பேணவும் உதவும்படி யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவை வேண்டுகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார் மக்களுக்கு யுத்த இழப்பீடுகள் வழங்குக; புனரமைப்பு அமைச்சிடம் அடைக்கலநாதன் கோரிக்கை

(மன்னார்)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்ட மக்களுக்கான இழப்பீடுகள் குறித்து வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் புனரமைப்பு அமைச்சிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய இழப்பீடுகள் உடனயடியாக வழங்கப்படவேண்டும் என அவர் அதில் கோரியுள்ளார்.

மொத்தமாக 98 இலட்சத்து 37 ஆயிரத்து 825 ரூபாவை இதுவரை புனர்வாழ்வு அமைச்சு பாதிக்கப் பட்டவர்களுக்கு வழங்கவில்லை. இதன்காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் கடும் சிரமங்களுக்கு உள்ளா கியுள்ளதாக பாராளுமன்ற உறுப் பினர் செல்வம் அடைக்கலநாதன் கேட்டுள்ளார்.இதில் சொத்து பாதிப்பு ஏற்பட்ட 31 பேருக்கு 19 இலட்சத்து 24 ஆயிரத்து 175 ரூபாவும், கடுமையாக பாதிக்கப்பட்ட 150 பேருக்கு 79 இலட்சத்து 13 ஆயி ரத்து 750 ரூபாவும் வழங்கப்பட வேண் டியுள்ளதாக செல்வம் அடைககலநாதன் குறிப்பிட்டுள்ளார்.(32)

# தேர்தல் சுவரொட்டிகளை அகற்ற ஒரு கோடியே முப்பது இலட்சம் செலவு

சனாதிபதித் தேர்தலை முன் னிட்டு நாட்டின் அனைத்துப் பகுதி களிலும் ஒட்டப்பட்டிருந்த சுவரொட் டிகள் மற்றும் உருவப்பதாகைகள் ஆகியவற்றை அகற்ற சுமார் 1 கோடியே 30 இலட்சம் ரூபா செல வானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் கடந்த வெள்ளிக்கிழமையன்று தாக் கல் செய்யப்பட்டன.

இதனையடுத்து தேர்தல் ஆணையாளரின் ஆலோசனைக்கு ஏற்ப பொலிஸ் மா அதிபர் தேர்தல் தொடர்பான சுவரொட்டிகளை அகற் றும் உத்தரவை விடுத்திருந் தார்.இதனையடுத்து நாட்டின் அனை த்துப் பகுதிகளில் இருந்தும் சுவ ரொட்டிகள் அகற்றப்பட்டதாக பொலிஸ்மையங்களின் பொறுப்பதி காரிகள் தேர்தல்பொலிஸ்துறை அலு வலகத்திற்கு அறிவித்துள்ளனர். (32)

# மலையக கட்சிகளின் ஆதரவால் ரணிலுக்கு 12 இலட்சம் வாக்குகள்

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றின் ஆதரவை பெற்றுள்ளதால் ஐக்கிய தேசியக்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க,இம்முறை மலையகத்தில் 12 இலட்சம் வாக்குகளைப் பெறக்கூடும் என்று இரு கட்சிகளினதும் தலைவர்களான ஆறுமுகம் தொண்டமானும்,பெ.சந்திரசேனும் தெரிவித்துள்ளனர்.

இந்திய வம்சாவளி மக்கள் அதிகமாக வாழும் மலையகத்தில் தங்களின் கட்சிகள் பிரதான கட்சிகளாக உள்ளன என்றும், நுவரெலியா, பதுளை, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களின் வெற்றிக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரசும் மலையக மக்கள் முன்னணியும் முக்கிய காரணிகளாக இருக்கும் என்றும் கூறியுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக மலையகம் முழுவதையும் உள்ளடக்கிய விதத்தில் பெரும் பிரச்சாரங்களை முன்னெடுப்பதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரசும் மலையக மக்கள்முன்னணியும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அக்கட்சிகளின் தலைவர்கள் கூறினர்.

# கூட்டமைப்பின் தலைமைச் செயலகம் இன்று திருமலையில் திறப்பு

(திருகோணமலை)

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமைச் செயலகம் இன்று திருகோணமலையில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது. 2002ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கான புதிய தலைமைச் செயலக திறப்பு அதன் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் 22 பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# மாலதி நினைவாக கலைமாலை நிகழ்வு கனடாவில் சிறப்புற அனுஷ்டிப்பு

உலகத் தமிழர் இயக்கமும் மார்க்கம் கலை பண்பாட்டுக் கழகம் ஏற்பாடுசெய்த 2ஆம்லெப். மாலதி நினைவு எழுச்சிக்கலைமாலை நிகழ்வுநேற்றுக் கனடாரொரன்ரோவில் மாலை6.00மணிக்கு ஆரம்பமாகியது. முதல் நிகழ்வாக பொதுச் சுடரினை ம5 பகுதிப் பொறுப்பாளர் காந்தன் ஏற்றினார். அதனைத் தொடர்ந்து கனேடியத் தேசியக் கொடியை ம10 பகுதிப் பொறுப்பாளர் சண்முக நாதனும் தமிழீழதேசியக்கொடியினை இளம்பிறையின் தாயார் பெனான்டோபிள்ளையும் ஈகச் சுடரினை லிங்கமும் ஏற்றி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கலை நிகழ்ச்சிகளாக திருமதி.கிருபாநிதி இரத்தினேஸ்வரனின் மாணவிகள் வழங்கிய நடனங்கள் நடைபெற்றன. அதைத் தொடர்ந்து அறிமுக உரையை கலாநிதி குலமோகன் வழங்கினார். தொடர்ந்து திருமதி. குகவதி மாணிக்கவாசகரின் நெறியாள்கையில் தமிழ்க்கலைத் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களின் நடனமும் தொடர்ந்து சறோஜினி ஜெயரத்தினத்தின் மாணவிகள் வழங்கிய விடுதலைக் கீதங்களும் இடம் பெற்றன. தொடர்ந்து நேருகுணரட்னம் சமகாலப்பகிர்வு பற்றி உரையாற்றினர். தொடர்ந்து திருமதி. கலாநிதி குலமோகனின் ஆக்கத்தில் உருவான நிகழ்வும் அதைத் தொடர்ந்து தலை நிமிர்வு இறுவட்டு வெளியீடும் இடம் பெற்றது. (எ)

# சுதந்திரப்பறவைகள் ஏடு இன்று வெளிவருகின்றது

விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான "சுதந்திரப் பறவைகள்" ஏட்டின் ஆவணி-புரட்டாதி மாத இதழ்இன்று வெளிவருகின்றது.

"காலம் சொல்கின்ற வரலாற்றுச் செய்தி", என்ற 2ஆம்லெப் மாலதியின் நினைவு நாளையும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டுஅரசியல்துறை மகளிர் விடுக்கும் அறிக்கையை முன்பக்க செய்தியாகத் தாங்கி வருவதுடன் "இலக்குநோக்கிய திசை வழியில் இருபது வருடம்" "சிறகுகளை அகலவிரித்து தேசத்தின் விடியல் நோக்கிய சுதந்திரப்பறவைகள்" "உயிர் காக்கும் உன்னதப்பணி" "ஒரு புதிரும்இன்னொரு பரணியும்" "இமயத்தை மோதிய இரும்புப் பெண்கள்"" சாதனை மங்கைகளும் சரித்திர வேங்கைகளும்" "வதைகளின் கதைகளிலிருந்தே வரலாறுகள் பிறப்பெடுக்கின்றன" "உயிர்க்காற்று"" "எதையும் பிள்ளைகளால் செய்யமுடியும் எனத் தலைவன்தந்த ஒளியில்" "எதை நினைக்கிறாயோ" "உழைக்கும் கரங்கள்" உட்பட பல ஆக்கங்களையும் "வாழ்வு விடுதலைப் பயணத்தில் தான் "என்ற ஆசிரிய தலையங்கத்தையும் தாங்கி இந்த ஏடு வெளிவந்துள்ளது.

## கடற்றொழிலில்...

வெளியிணைப்பு இயந்திரங்களையும் கழற்றி கடலில் எறிந்துள்ளனர். இதனால் குறிப்பிட்ட நேரத்திற்குள்கரை சேரமுடியாதிருந்த இந்த மீனவர்களை தேடிச் சென்றமற்றொரு கடற்றொழில் அணியினர் இவர் களுக்கு உதவி அளித்து கரைசேர்ந் ததாக தெரிவிக்கப் படுகின்றது.சிறிலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்ட இரண்டு மீனவர்களும் வத்திராயன் இடைத்தங்கல் முகாமில் உள்ளவர்கள் எனத் தெரிவிக்கப் படுகின்றன.

## தமிழீழப்...

அகவணக்கம் செலுத்தப்படும். தொடர்ந்து சிறப்புரைகள், கலைநிகழ்வுகள் நடைபெறும்

மன்னார் மாவட்டத்தில் 2ஆம் லெப். மாலதி நினைவுத் நிகழ்வுகள் மாலை 4.00 மணிக்கு ஆண்டான் குளம் பாடசாலையிலும் நடைபெறும்.மேலும் யாழ்.கோப்பாயில் 2ஆம் லெப். மாலதிநினைவுத் தூபியில் பிரதான நிகழ்வு நடைபெறும்.இந்நிகழ்வுகளை முன்னிட்டு நினைவுத்தூ பிகள்,பிரதான இடங்களில் நிகழ்வு நடைபெறும் பகுதிகள் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக் கப்பட்டுள்ளதுடன் எழுச்சி வாசகங்கள் எழுதப் பட்ட பதாகைகளும்கட்டப்பட்டுள்ளன.

## வெட்டுக்காயங்களுடன்...

டியைச் சேர்ந்த முத்துலிங்கம் சந்திரகுமார் (வயது-27) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் சிகிச்சை பெறும் விடுதிக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு கூரிய ஆயுதங்களினால் தாக்கிப் படுகாயம் விளைவிக்கப்பட்டகுறித்த நபர் மீது வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்ற வெவ்வேறான கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் பத்திற்கும் அதிகமான வழக்குகள் பருத்தித்துறை நீதிமன்றில் நிலுவையில் இருந்து வருவதாகப் பொலிஸ் தரப்புதகவல்கள் மேலும்தெரிவிக்கின்றன. (கா,27)

## க.க.குழு...

நடத்தவுள்ளார். இலங்கையின் சமாதான நடவடிக் கைகளிற்கு பங்களிப்பு செய்து வரும் நோர்வே அரசாங்கத்தின் விசேடபிரதிநிதியாகவே இலங்கை வரவுள்ளார்.

## புலிகளைக்...

கூட்டத்திற்கு பொங்குதமிழ் நிகழ்வு ஏற்பாட்டுக்குழுவின் தலைவர் க.தங்கராசா (ஓய்வுபெற்ற வலயக்கல்விப்பணிப்பாளர்) தலைமை வகித்தார். பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம், சட்டத்தரணி கா.சிவபாலன், திருமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன், மாவட்ட தமிழ்ப்பெண்கள் ஒன்றியத்தின் தலைவி திருமதி இ.கண்மணி ஆகியோர் பங்குபற்றினர்.

பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் மேலும் கூறுகையில், தமிழ் மக்கள் சனநாயக வழியில் சாத்வீகப் போராட்டங்களை நடத்தினர். அவற்றை அரசாங்கம் தனது இராணுவத்தை கொண்டு அடக்கி, தமிழ்மக்கள் மீது வன்முறையைக் கட்ட விழ்த்துவிட்டது அரசின் இந்த அடக்குமுறை, வன்முறைக்குப் பதிலடி கொடுக்கவே தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களைக் கையில் எடுத்தனர். வன் முறைக்குப் பதிலடி கொடுக்கப்புறப்பட்ட தமிழ் இளைஞர்களை பயங்கரவாதி என்றழைப்பதா? இராணுவப்படையை உருவாக்கி அதில் சேர்ந்து கொண்டு போராடுவதற்கு தமிழ் இளைஞர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் இளைஞர்கள் நடத்தி வரும் ஆயுதப்போராட்டத்தின் முன்பாக அரசுப்படை தோல்விகண்டது.

பேச்சுவார்த்தை ஆரம்பமானது. நோர்வே சர்வதேச அனுசரணையாளராகியது. ஈழத் தமிழரின் விடுதலைப்போராட்டத்தின் இறுதி அத்தியாயத்திற்கு நாம் வந்துள்ளோம் என்பதை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும்.

இன்று நாட்டின் இரு பிரதான அரசியல் கட்சிகளும் சமஷ்டி அரசமைப்புக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளன.

முறையான சமாதானப் பேச்சுவார்த்தை தற்போது இல்லை. சமாதானமும் இல்லை. இதனை எவ்வளவு காலத்திற்கு நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியும், விடுதலைப்புலிகளை கொச்சைப்படுத்தி பலவீனமடையச் செய்யும் முயற்சியில் தான் அரசும் அதன் படைகளும் ஈடுபட்டுள்ளன.

நாம் யுத்தத்தை தொடங்கவிரும்பவில்லை. ஒன்றைத்தான் கேட்கவிரும்புகின்றோம் நாம் எங்குபோய்க்கொண்டிருக்கின்றோம். எங்கு போய் நிற்கவிருக்கின்றோம். அரசியல் சனநாயக மற்றும் ஆயுதவழியிலான தமிழ் மக்களின் போராட்டங்களை உதாசீனப்படுத்தும் நிலை தான் உருவாகி வருகிறது.

தமிழர் உரிமைப்போராட்டம் விடுதலைப் புலிகளுக்கு மட்டு மானதல்ல. தமிழ்பேசும் மக்களின் சொத்துமாகும்.

தற்போதைய நிலை தொடரமுடியாது இதனைஅரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் தெளிவாகஉணர்த்துவதே திருமலையில் பொங்குதமிழ் நிகழ்வு நடத்தப்படுவதன் நோக்கமாகும். தமிழ்பேசும் மக்கள் அடைந்த இழப்புக்கள், அழிவுகளுக்கு ஏற்புடைய வகையில் அரசியல் தீர்வுகாணப்படவேண்டும். இல்லாவிடில் தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமையை சர்வதேச சமூகம் அங்கீரிக்க வேண்டும்.

கொழும்பு அரசாங்கம் முறையான ஆட்சி ஒன்றை தென்னிலங்கையில் நடத்தமுடியாது திணறுகிறது. தங்கள் சுமைகளை தாங்கிக் கொள்ள முடியாத கொழும்பு அரசு தமிழ் பேசும் மக்களின் சுமைகளுக்குத்தீர்வு காண்பதை தமிழ்பேசும் மக்களிடமே விட்டு விடவேண்டும். இதனைவலியுறுத்துவதாக அமையப் போகும்பொங்கு தமிழ்ப்பிரகடணம் அரசாங்கத்தையும் சர்வதேச சமூகத்தையும் சிந்திக்கத் தூண்டும் என்று சம்பந்தன்குறிப்பிட்டார். (25)

## திருமலையில்...

லிருந்து இறக்கி, அவர்களை கைகளை மேலே தூக்கும்படிஉத்தரவிட்டு, பாதம் தொடக்கம் தலை வரை உடல் சோதனைக்குப் பயினர் உட்படுத்துகின்றனர். இதனை அந்த இடத்தில் சிங்களவர் குழுமி நின்று வேடிக்கை பார்த்து நகைக்கின்றனர்.

இவ்வாறான இழிநிலைக்கு தமிழர்கள் உள்ளாக்கப்படும் போது சமாதானத்தை உருவாக்குவதுஎவ்வாறு? இந் நடவடிக்கைகளினால் தமிழர்கள் மனம்நொந்து போகின்றார்கள்.

விடுதலைப் போராட்டம் ஆரம்பமானதன் காரணத்தை தெற்கு மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். எமது மண்ணில் நாம் இழிநிலைக்கு உள் ளாக்கப்பட்டு வந்துள்ளோம். எமது மண்ணில் நாம் சுதந்திரமாக வாழ வேண்டும். அது தான் தமிழ் மக்களின் இலட்சியம். திருமலையில் சமாதான சூழ்நிலை என்று கூறிக் கொண்டாலும் போர்ச்சூழல்தான் காணப் படுகின்றது. மக்கள் பீதியில் தான் வாழ்கின்றார்கள் எனத் தெரிவித்தார்.

அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதி ஒருவர் கருத்து வெளியிடுகையில், இக்கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்காகத் தாம் 13 சோதனைச் சாவடிகளைத் தாண்டி வரவேண்டியிருந்ததாகக் குறிப்பிட்டார். இவ்வளவு சோதனைச் சாவடிகள் யுத்தகாலத்தில் கூடஇருக்கவில்லை என்றும்அவர்குறிப்பிட்டார். (25)

## எதிரியின்...

தேசியத்தலைவர் அவர்களின் கூற்று. அதனை மெய்யாக்கி தமிழீழப் பெண்கள் அனைவரிற்கும் வழி காட்டியாகியவர் 2 ஆம் லெப். மாலதி. அவரது நினைவோடு எமது இலட்சியத்தை அடையும் வேகத்தை அனைவருமே விரைவுபடுத்த வேண்டும். தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் அன்று பெண்கள் தம்மை இணைத்துக்கொண்ட போது, "இது பெண் விடுதலைக்குச் சாத்திய மற்ற வழி" எனப் பல விமர்சனங்கள் எழுந்தன. ஆனால் இன்று அந்த விமர்சனங்களையெல்லாம் தூக்கி யெறிந்து தமிழீழப்பெண்கள் தமது பலத்தில் நிமிர்ந்து நிற்கின்றார்கள்.

ஒரு காலத்தில் சமூகத்திலிருந்து போராடப்போன பெண்கள் சமூகத்தின் நடைமுறையிலிருந்து வேறுபட்டவர்களாகப் பார்க்கப்பட்டனர். போராளிப் பெண்களின் மீதான மதிப்பும், நம்பிக்கையும் சமூகத்தில் வாழுகின்ற பெண்களிடம் காணப்படவில்லை. ஆனால் காலப்போக்கில் போராளிப் பெண்களின் துணிவோடும் நம்பிக்கையோடும் சமூகப் பெண்கள் பல துறைகளில் முன்னேறத் தொடங்கிவிட்ட தன்மையை இன்று அவதானிக்க முடிகிறது. பொருளாதார விருத்தியில், அரசியல் எழுச்சியில் தமிழீழப் பெண்கள் வேகமான மாற்றத்தை அடைந்து வருகின்றனர். ஒரு காலத்தில் வீட்டுக்கு வெளியே போகாமல் குடும்பப் பொறுப்புக்களை மட்டுமே சுமந்த பெண்கள்இன்று அதிகளவில் வெளியிடங்களில் பணிபுரிகின்ற பெண்களாகவுள்ளனர். அதுமட்டுமல்லாமல் இந்த வேலைகள்தான் பெண்களுக்கு உரித்தானவை என்ற பழைய எண்ணங்களும் மாறிவருகின்றமையை அவதானிக்க முடிகிறது. மிகக் கடு மையான நுட்பமான வேலைகளை எமது சமூகப் பெண்கள் ஆற்றத் தொடங்கி விட்டனர். இது எமது தமிழீழ அபிவிருத்திக்கு வலுச்சேர்ப்பதாகவே அமைகிறது. இந்த முனைப்பு மென்மேலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். தொடர்ச்சியான உழைப்பும் அதன் மூலம் அவர்கள் பெற்றுக்கொள்ளும் நிபுணத்துவ வளர்ச்சியும், அந்தப் பெண்களுக்கு வழங்கப்படுகின்ற ஒத்து ழைப்புமே இதனைச் சாத்தி யமாக்கும்.

இன்றைய சமாதானச் சூழல் மீதான நம்பிக்கை முற்றிலும் சிதைந்து போயுள்ள நிலையில் மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் மூலமும், இராணுவப் பயிற்சி பெறும் மக்கள் படைக்கட்டுமானங்கள் மூலமும் தமது போராட்ட நடவடிக்கை களைத் தீவிரப்படுத்தி வருகின்றனர். இந்த மக்கள் எழுச்சி நிகழ்வுகள் அனைத்திலும் பேரார்வத்துடன் பங்குபற்றி உழைக்கும் பெண்களின் தேசியப் பற்று உன்னத்மானது. ஒவ்வொரு மக்கள் எழுச்சி நிகழ்வுகளிலும் மக்களை வீடு வீடாகச் சென்று அணி திரட்டும் பணிகளிலும், அரங்கிலே நின்று எழுச்சிக் கோஷங் களையும் விடுதலைப் பாடல்களையும் பாடி இலட்சக்கணக்கான மக்களை விடுதலைச் சன்னதம் கொள்ள வைக்கின்ற தமிழீழப் பெண்களின் ஆற்றுகை எமது விடுதலை வரலாற்றில் தனித்துவமானது. மக்களுக்குத் தலைமை தாங்கும் பெண் அரசியல் தலைவிகளாகப் பெண்கள் பரிணாமம் பெறவேண்டும் என்ற எமது தேசியத் தலைவரின் கனவு நனவாகி வருகிறது.

எமது தாயகம் இன்றும் முற்றுமுழுதான விடுதலையை அடைந்து விடவில்லை. அழகும் வளமும் நிறைந்து தமிழரிற்கு வாழ்வளிக்கின்ற தாயகத்தின்பல பகுதிகள் இன்றும் எதிரியின் ஆக்கிரமிப்புக்கு இலக்காகிக் கிடக்கின்றது. அந்த மண்ணை மீட்டெடுக்க வேண்டும். அங்கே சிதைந்து கொண்டிருக்கும் அவர்களின் வாழ்வை, அவர்கள் சுமக்கும்துயரச் சிலுவைகளைத் தூக்கியெறிந்து போராடும் பெண் களாக அவர்கள் மாறவேண்டும்.

போர்க்காலங்களில் களங்களில் நின்று போராடும் பெண்களுக்குத் தோள் கொடுத்து கிராமியப்படையாக. எல்லைப்படையாக, துணைப் படையாக களமுனைக்கு வந்து பலம் சேர்த்த பெண்கள் இனியும் அந்தப் பலத்தை மேம்படுத்த வேண்டும் என்பதுதான் காலத்தின் தேவை.

சமூகத்தின் ஒரு புறத்தே பெண்களின் ஆளுமை மிளிருகின்ற அதேவேளை மறுபுறத்தே பழைய கண்ணீர்க்கதைகளும், ஆணாதிக்கச் சிந்தனை வெளிப்பாடுகளும் அரங்கேறிக்கொண்டே இருக்கின்றன. எமது தமிழீழ தேசம் முழுமையாக விடுதலையடையும் போதுதான் சமூக மாற்றங்களைச் சாத்தியமாக்கும் சூழல் உருவாகும். அதற்காக அனைவரும்இணைந்து போராடி தேசிய விடுதலையை விரைவு படுத்த வேண்டும்.

தென்தமிழீழத்தில் கண்ணீர் சிந்தும் பெண்களின் துயரம் எல்லையில்லாதது. படுகொலைச் சம்பவங்களால் வாழ்க்கைத் துணைவரை இழந்து தவிக்கும் இளம் விதைவைகளும் அவர்களின் குழந்தைகளும் இன்றும் முடிவுறாத துயர வாழ்வையே தொடருகின்றனர். வல்லமைமிக்க இளம் பெண்கள் போராட்டத்திற்குப் பலம் சேர்க்கத் தயாராகும் போதுதான் எதிரியின் ஆக்கிரமிப்பில் இருக்கின்ற தென் தமிழீழத்தின் வளம் கொழிக்கும் நிலத்தையும் அந்த நிலத்தின் மீதான எங்களின் வாழ்வையும் மீட்டெடுக்க முடியும்.

இத்தனை காலமும் எமது தமிழீழப் பெண்களின் தீராத துயர் சுமந்த வாழ்விற்கு முடிவு கட்டுவதில் பெண்ணுரிமை, மனிதநேயம் என்ற மகத்தான விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் பங்குண்டு. எனவே தமிழ்ப் பெண்களின் தேசிய அரசியல் அபிலாசைகளைப் புரிந்துகொண்டு அதற்கு முக்கியத்துமளித்துத் தமிழ்தேசிய இனத்தின் அங்கமாகிய தமிழ்ப்பெண்களின் விடுதலை நோக்கிய வாழ்விற்கு, ஒட்டு மொத்தமான தமிழ்தேசிய இனத்தின் உரிமைக்குரலைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதே தமிழ்மக்களின் பெரும் எதிர் பார்ப்பாகும். இன்று ஒவ்வொரு தமிழீழப் பெண்களும் ஆழமாக உணர்ந்து முடிவெடுக்க வேண்டிய கட்டத்திற்கு வந்து விட்டோம். அன்று எமது விடுதலைக்கு எங்கும் தடைகளே இருந்தன. இன்று எமது தேசியத்தலைவரின் காலத்தில்எம்மை மேம்படுத்தும் படிக்கற்களே தென்படுகின்றன. அன்று நாம்காலத்தைத் தவறு சொன்னோம். இன்று நாம் இந்தக்காலத் தைத் தவறவிட்டால் வரலாறு எங்களைப் பழிசொல்லும். சமாதானத்தைச்சாகடிக்கும் பேரினவாதமும், போரினவாத அரசுக்குத் துணைபோகும் சக்திகளும் அவலத்தைத் தவிர எமக்கு எதையுமே தரப்போவதில்லை என்றுணர்த்தினால் வரலாற்றின் கட்டளையை ஏற்று விடுதலையின் வழிநடக்கத் தயாராவோம். பதிய வாழ்வு சமைப்போம்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.